Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (16-8-66) இதழ் 187

பராபவ ஆடி 31 ரபீ ஆகி 28 செவ்வாய்க்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன்: 519
நகை மாளிகை
கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

## 100 கடைகள் எரிந்து சாம்பல்

பாங்காக், ஆக. 15

இங்குள்ள 'எ ஞ மல் தொழிற்சாலை யொன்றில் ஏற்பட்ட பெரும் தீ விபத்திஞல் தொழிற்சாலைக்கு அருகிலிருந்த 100 கடைகளும் வீடுகளும் எரிந்து சாம்பலாயின.

# டில்லியில் பூமியதிர்ச்சி: மாடி இடிந்து 14 பேர் பலி

## சுதந்திர தினத்தில் பரிதாப சம்பவம்

### பிரதமர் இந்திரா நேரில் சென்று பார்வையிட்டார்

புதுடில்லி, ஆக. 15

இருபதாவது ஆண்டு சுதந்திர தினத்தை சிறப்பான முறையில் கொண்டாடிக் கொண்டிருந்த இந்தியா, இன்று காலையில் ஓர் சோக சம்பவத்தையும் எதிர்நோக்க நேரிட்டது.

புதுடில்லியில் இன்றுகாலை 7.50-க்கு ஏற்பட்ட பூமி அதிர்ச்சியினு டில்லியில் உள்ள ஜும்மா மசூதிக்கு அருகாமையிலுள்ள மூன்றுமாடிக் கட்டிடமொன்று இடிந்து வீழுந்தது. இவ்விபத்திஞல் 5 குழந்தைகளும், 3 பெண்களும் உட்பட பதின்மூன்று பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர். இந்த சோக நிகழ்ச்சி செங்கோட்டைச் சதுக்கத்தில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சுதந்திரதின உரை நிகழ்த்திக்கொண்டிருக்கையில் ஏற்பட்டது.

**30 வினடிகள் நீடித்தது**

புதுடில்லியில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினுல் சேதம் எதுவும் ஏற்படவில்லையென்று முன்னர் கிடைத்த செய்திகள் தெரிவித்தபொழுதிலும் பின்னர் வெளியான செய்திகள் இந்த அதிர்ச்சியை அவித்தது. இந்த நில அதிர்ச்சி முப்பது வினடிகள் வரை நீடித்திருந்தது.

**24 பேர் காயம்**

பூமியதிர்ச்சியினுல் மூன்றுமாடிக்கட்டிடம் இடிந்து விழுந்தபொழுது, பலர் அதன் இடிபாடுகளுக்குள் சிக்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மீட்புவேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டபொழுது பதின்மூன்று பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் பலர் உயிருடன் புதையுண்டிருக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள 24 பேரில் எண்மரின் நிலைமை கவலைக்கிடமாகவிருப்பதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

**பிரதமர் சென்று பார்த்தார்**

இன்றுகாலையில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டபொழுது பிரதமர் திருமதி இந்திரா காந்தி செங்கோட்டையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் சுதந்திர தின உரைநிகழ்த்திக்கொண்டிருந்தார். சுதந்திரதின வைபவங்களில் கலந்துகொண்டிருந்த பிரதமருக்கு நில அதிர்ச்சி செய்தி தெரிவிக்கப்பட்டதும், தாம் பெரு அதிர்ச்சி அடைந்தாக பிரதமர் குறிப்பிட்டார். சில நிமிடங்களுக்கு ளாக பிரதமர் திருமதி இந்திரா காந்தி விபத்துநடைபெற்ற இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

## இன்று சதிவழக்கு விசாரணை ஆரம்பம்

கொழும்பு, செவ்.

இரண்டாவது சதிவழக்கு விசாரணை இன்று காலை, கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் திரு. பி. ஜி எஸ். டேவிட் முன்னிலையில் ஆரம்பமாகும் பொழுது பிராஸிக்கூஷன் தரப்பில் அட்டர்ணி ஜெனரல் திரு. ஏ. ஸி. எம். அமீர் வழக்கை எடுத்துரைப்பார்

ஞானசகீக தோரோ, முன்னுள் ராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ரிச்சர்ட் உடுகம ஆகியோர் உட்பட 28 பேர்மீது, தேசிய அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாக இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒரு எதிரியான சுனில் ஹேவகே இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படும் போது, அவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் அவருக்கு வாசித்துக் காட்டப்படும்.

அட்டர்ணி ஜெனரல் வழக்கு பற்றி எடுத்துரைத்த பின் எதிரிகளுக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை நிரூபிக்கும் பொருட்டு சாட்சிகள் விசாரணை செய்யப்படுவர். இன்று ஆரம்பமாகும் விசாரணை இவ்வாரம் முழுவதும் தொடர்ந்து நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

முன்னைய தவணையின் போது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதும் எதிரிகள் சிலர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், தங்கள் கட்சிக்காரர்கள் துன்புறுத்தப்பட்டு, அந்த வேதனை தாங்க முடியாமல் நிர்ப்பந்தத்தின் மீது ஒப்புதல் வாக்கு மூலமளித்ததாகத் தெரிவித்திருந்தனர். நாளை நீதி மன்றம் கூடும் பொழுது, எதிரிகள் புதிதாக வாக்குமூலமளிக்க அனுமதியளிக்கப்பட வேண்

(5-ம் பக்கம் பார்க்க)

## வயிற்றோட்டத்துக்கு பலியாகும் குழந்தைகள்

### 25 ஆக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செவ்

வயிற்றோட்டம் காரணமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பலியாகும் குழந்தைகளின் தொகை இம்மாதத்தில் மட்டும் இதுவரை இருபத்தைந்தாக அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நளசரி அனுமதிக்கப்படும் ஐந்து குழந்தைகளில் இரண்டு குழந்தைகள் வீதம் பலியாகின்றனவாம்.

இதுபற்றி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி அதிகாரி யொருவர் தெரிவிக்கையில் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதத்தில்தான் வயிற்றோட்டம் காரணமாக குழந்தைகள் அதிகமாக அனுமதிக்கப்படுகின்றன என்று கூறினர்.

## 1969-ல் மனிதன் சந்திரனை அடையலாம்

வாஷிங்டன், ஆக. 15

சந்திர மண்டலத்திற்கு செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள்பற்றி அறிவதற்கான முயற்சியில் அமெரிக்கா சென்ற புதன்கிழமை அனுப்பிய "ஒபிட்டர்" என்ற செயற்கைக் கிரகம் திட்டமிட்டபடி செயல்பட்டு வருவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

வரும் வியாழக்கிழமை முதல் இச்செயற்கைக் கிரகம் சந்திரனது பரப்பை அறியக்கூடியதான நல்ல தகவல்களைத் தருமென்றும் 1969-ம் வருடத்தில் மனிதன் சந்திர மண்டலத்தை அடையக்கூடியதான வாய்ப்பை இது ஏற்படுத்தித்தருமென்றும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று பட்ஜெட் வாக்கெடுப்பு

கொழும்பு, செவ்

இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நடைபெறும். நிதி அமைச்சர் திரு. வன்னிநாயக்கா வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தை முடித்துவைப்பார்.

## பிலிப்பைன்சிலும் பூமிஅதிர்ச்சி

லண்டன், ஆக. 15

இன்று பிலிப்பைன்சில் கடுமையான பூமிஅதிர்ச்சி ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [illegible] சேதம்பற்றிய விபரம் தெரிவிக்கப்படவில்லை.

"சிங்களம், தமிழ்

## சம அந்தஸ்து எனில் எதிர்த்திருக்கமாட்டோம்"

### யாழ்ப்பாணத்தில் பெர்னுட் சொய்சா பேச்சு

யாழ்ப்பாணம், செவ்வாய்

"தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமஉரிமை கோரும் ஒரு மசோதாவென்ருல் நாம் நிச்சயமாக எதிர்ப்புத் தெரிவித்திருக்கமாட்டோம். ஆனுல் ஆங்கிலத்துக்கு தேசிய மொழிகளிலும் பார்க்க முதலிடம் தரும் மூன்று ஷரத்துகள் இவ்வருடம் ஜனவரி 8 ல் பார்லிமெண்டில் கொண்டுவந்ததால்தான் கூட்டுக் கட்சியினராகிய நாம் அதனை எதிர்த்தோம்" என்று கொழும்பு தெற்கு இரண்டாவது எம். பி. யும், லங்கா சமசம ஜக் கட்சிப் பிரமுகருமான திரு. பெர்னுட் சொய்சா கூறினர்.

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நேற்று இரவு நடைபெற்ற ஹர்த்தால் ஞாபகதினக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னர். கூட்டத்துக்கு திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமை வகித்தார்.

திரு. பெர்னுட் சொய்ஸா மேலும் மேலும் பேசுகையில் கூறியதாவது:

1964ம் ஆண்டுக்கு உகிலை அழைத்துச் செல்கிறேன். ஸ்ரீமா அரசாங்கத்திடம் நாம் பதினைந்து அம்சக் கோரிக்கையைச் சமர்ப்பித்தோம். அதில் மொழிப் பிரச்னையும் ஒன்ருக இருந்தது அந்தச் சமயத்தில் நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் எமது தலைவர்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

**வீடு**

12ம் வட்டாரத்தில் நம்பர் 226, காரைதீவு வீதியில் எல்லா வசதிகளுடன் வீடு விற்பனைக்கு உண்டு. குறைந்தவிலை ரூபா45000/- மேற்பார்வையாளர், 13, சீனிவாசகம் வீதி, கொட்டடி. 847

**50 கால் நடைகள்**

**70 ஆடுகள்**

பரிசு பெற்றவையும், வனப்பும், ஆரோக்கியமும், நல்ல இனமும் கலப்புமுள்ள 50 கால் நடைகளும் (பால் மாடுகள், சேப்பைகள், எருதுகள், வண்டி மாடுகள், கொழும்பு ஆடிவேல் ரதமிழுக்கும் பொருத்தமான ஓங்கோல் இன காளைகள்) 70 ஆடுகளும் (வளர்ப்புக்கு மிக உகந்த நேர்த்தியான ஜம்னுபாரி கலப்பு இனங்கள்) 23-8-66 செவ்வாய்க்கிழமை, (போயாதினம்) வதுமுன்னகெதரையிலுள்ள நாக தோட்டத்தில் ஏலத்தில் விற்கப்படும். பக்கில, மகந்துர வெலிபென்ன கஹாமுல்ல, உடுபத்தல

## தேவை

**நெசவாளர்**

கைத்தறி நெசவு நிலையத்திற்கு திறமை வாய்ந்த ஆண், பெண் நெசவாளர் தேவை. 17-8-66 தொடக்கம் 1-9-66 வரை நிலயத்திற்கு நேரில் வரவும். சி. நவரத்தினம், சக்தி கைத்தறி நெசவு சாலை, டச்சு வீதி, சாவகச்சேரி. 849

## வைத்தியம்

நீரிழிவு, கசம், நீரிழிவு, நீரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். வகுப்புகள்:-

ஆகிய இடங்களிலிருந்து ரேட் மூலம் வரலாம். B. W. D லம்பேட் & கோ, ஏலவிற்பனையாளர், தரகர், மதிப்பாளர், நீர்கொழும்பு, தொலைபேசி: 362. 845


★ கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்

★ திருமண வைபவங்கள்

★ புதுமனைப் பிரவேசம்

★ புதுமனைக்கு அத்திவாரமிடல்

ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளைவ சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனைதிகள், பன்னீர், நெய், தேன், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம், அஷ்டபந்தன மருந்து முதலிய சகல சாமான்களும்

மற்றும்

சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் ஆகியவைகளும் சகலவிதமான மருந்துகளும், மருந்துச் சரக்குகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

★ மயில் மார்க் சந்தன வில்லைகள்

★ சுகந்த சந்தனப் பவுடர்

★ பச்சை சந்தனம்

(உடன் யந்திரத்தினுல் அரைத்தது)

எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை யாழ்ப்பணம். போன்: 541, 7068

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.



**யாழ். நகரமண்டபத்தில்**

**15—8—66முதல் 19—8—66 வரை**

தினசரி பி. ப. 6—30 மணிக்கும் 9—30 மணிக்கும்

— தேவ் & தேவ் அளிக்கும் —

# பாச நிலா

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட முதல் முழுநீள 16 மி. மீட்டர் தமிழ்ப் படம்

(பாதி கலரில் -காந்தஒலி)

(Processed in Germany — Sound Striped in Canada)

நடிகர்கள்:

செல்வராஜன் - ரஞ்சி செல்வராஜன்

மனேகரன், ஜெயந்திரா

ஐடா தேவேந்திரன்

முதலியோர்

டிக்கட் 6-30 மணிக் காட்சிக்கு ரூபா 5, 3, 2.

9-30 மணிக் காட்சிக்கு ரூபா 3, 2,


## கிராமம்மீது விமானத்தாக்குதல்

ஹானோய், ஆக. 16

ஹானோய்க்கு அருகே ஒரு கிராமம்மீது நேற்று அமெரிக்க விமானங்கள் தாக்குதல்கள் நடத்தியதாக வடக்கு வியட்னும் அறிவித்துள்ளது. இத்தாக்குதலின்போது பலர் மாண்டனர் என்றும் வீடுகள் தீப்பற்றி எரிந்தன என்றும் வடக்கு வியட்னும் புகார் செய்துள்ளது.

## அமெரிக்க உணவு உதவி சுயஉதவியை வற்புறுத்தும்

வாஷிங்டன், ஆக. 16

ஜனதிபதி ஜோன்ஸன் பிரேரித்துள்ள சுதந்திரத்திற்கான உணவுச் சட்டம் ஒருமாத காலத்திற்குள் காங்கிரஸ் சபையினுல் அங்கீகரிக்கப்படுமெனத் தாம் எதிர்பார்ப்பதாக விவசாயக் காரியதரிசி திரு. பிரீமன் தெரிவித்துள்ளார்.

வானெலிக்கு அளித்த பேட்டியொன்றில் 'பி எல் 480 (அமைதிப்பணி உணவுச்) சட்டத்தில்' திருத்தியமைக்கப்பட்ட விரிவான அமைப்பு இதுவென்றார்.

பி எல் 480ன் முக்கிய அம்சம் கடந்த காலத்தைப் போல் உணவை மட்டும் உதவியாகக் கொடுக்காது அபிவிருத்தியடையும் நாடுகள் மூலம் தமது விவசாயத்தை விருத்திசெய்யக்கூடிய சகல வளங்களும் கொடுத்துதவப்படும் என்றார்.

காலகெதியில் அமெரிக்கா உலகம் முழுவதற்கும் உணவு வழங்குமாவெனக் கேட்கப்பட்ட கேள்விக்கு இல்லையெனப் பதிலளித்தார் உலகனைத்திற்கும் உணவு வழங்கும் சக்தி அமெரிக்காவுக்கு இல்லையெனத் தெரிவித்த காரியதரிசி அபிவிருத்தியடையும் நாடுகளில் உணவுஉற்பத்தியைப் பார்க்கிலும் ஜனப்பெருக்கம் முன்னேறிக்கொண்டு போவதாகவும் குறிப்பிட்டார். ஆதலால் ஜனத்தொகைப் பெருக்கக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கட்டுப்பாடுகளின் மூலம் ஜனத்தொகைப் பெருக்கத்தைக் குறைக்க முடியும். அப்பொழுதுதான் மக்கள் பொருளாதார வளர்ச்சி மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தமுடியும் என்றார்.

## சாக்குமூட்டையில் பெண்ணின் பிரேதம்

சென்னை, ஆகஸ்ட் 15

தென்ஆற்காடு மாவட்டத்திலுள்ள காட்டுமன்னர் சோராலை என்னும் ஊரில் கண்டமங்கலத்தை சேர்ந்த கலியபெருமாளின் மனைவி சரோஜா, ஒரு ஏரியில் 'மரத்துக்குக் கீழாக சாக்கு மூடை ஒன்றில் பிரேதமாகக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். கலியபெருமாளைப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

## 1,400 சோள மூட்டைகள் பறிமுதல்

நெல்லை, ஆக. 15

நெல்லையில் உணவு அதிகாரிகள் நடத்திய திடீர் சோதனையில் 1,400 சோள மூட்டைகள் கைப்பற்றப்பட்டன.

## புதுடில்லியில் பூமியதிர்ச்சி

புதுடில்லி, ஆக 15

புதுடில்லியில் இன்று இலேசான பூமியதிர்ச்சி ஏற்பட்டது. சேதம் ஏதும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டத்தின் பிடிக்கு தப்பிய பத்தாயிரம்

கொழும்பு, திங்கள்

இந்தநாட்டில் 10,000 பேருக்குமேல் சட்டத்தினுல் தேடப்பட்டு வருகின்றனர். இவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்தும் தப்பிய குற்றவாளிகள்.

பெரிய, சிறிய குற்றங்களை செய்துவிட்டுச் சட்டத்தின் கைகளில் அகப்படாமல் நாட்டில் திரியும் இந்தப் பத்தாயிரத்துக்கும் அதிகமான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கப் பொலிசார் ஒவ்வொருநாளும் ஏதாவது புதுத்துப்புத் துலக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் மோசமான குற்றங்கள் புரிந்தவர்கள் தொகைஈராயிரம் இருக்குமெனத் தெரியவருகிறது.

அதிகமான குற்றங்கள், போக்குவரத்து மற்றும் மெல்லிய காயம் விளைவித்த குற்றங்களேயாகும்.

கொலை, கொள்ளை, களவு, மோசடி, நம்பிக்கைத் துரோகம், பலத்த காயமேற்படத் தாக்குதல் ஆகிய குற்றங்கள் புரிந்தவர்களும் உண்டு.

காணமற்போனவர்கள் தொகையும் சில ஆயிரக் கணக்கில் இருக்கிறதாம்.

## சபையிலிருந்து கல்தா

புதுடில்லி, ஆகஸ்ட் 15

டில்லி சட்டசபையில் உள்நாட்டுமந்திரி திரு. குல்சாரிலால் நந்தாமீது வசைமாரிபொழிந்த கம்யூனிஷ்ட் அங்கத்தவர் பி. கே. வாசுதேவன்நாயர், சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

மதுராந்தகம், ஆக. 15

மதுராந்தகத்துக்கு அண்மையிலுள்ள பனையூர் கிராமத்தைச் சேர்ந்த மாணிக்கம் என்பவர் மதுபோதையில் இருந்ததாக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். அவருக்கு மாஜிஸ்திரேட் 2 மாதச் சிறைத் தண்டனை வழங்கினர்.


REGAL—JAFFNA

NOW SHOWING

Anthony Quinn

Ingrid Bergman

in

THE VISIT

(Cinemascope)



# விளம்பரம்

## வாடகைக்கு லொறிகள் தேவை

பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுப் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தேவைக்கு வாரத்தில் திங்கட்கிழமைகளில் சங்கங்களுக்குச் சாமான்கள் ஏற்றுவதற்கும், புதன், வியாழக்கிழமைகளில் யாழ்ப்பாணத்திலிருந்து சமான்கள் ஏற்றிவருவதற்கும், இருமுறை கொழும்பு அல்லது கந்தளாயிலிருந்து சீனி ஏற்றிவருவதற்கும் லொறிகள் வாடகைக்குத் தேவைப்படுகின்றன.

விரும்புவோர் நேரிலாயினும், கடித மூலமாயினும் 25-8-66க்கு முன்பதாகத் தொடர்புகொள்ளவும்.

நீ. யேம்ஸ்

தலைவர், ப. கோ. ப. நோ. கூ. ச. சமாசம்.

14-8-66 928



**மகாத்மா தியேட்டர்**

(கரவெட்டி)

எஸ். எஸ். ஆர்.

விஜயகுமாரி

முதலியோர் நடித்த

"பூமாலை"



**ராஜா**

(யாழ்ப்பாணம்)

தினசரி -2-30, 6-30, 9-45

போயா தினங்களில் 4 காட்சிகள்

THE PURPLE MONSTERS STRIKE

(Republic Serial)



**நியூ காலிங்கன்**

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறை தினங்களில் 2-30 மணி

சிவாஜி - சாவித்திரி

நடித்த

கப்பலோட்டியதமிழன்



**வெள்ளி முதல்**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை)

ரி. எம். சௌந்தரராஜன்

பி. எஸ். சரோஜா

எம். ஆர். ராதா, மனேகர், சாரதா, லட்சுமி, ராஜம்

மற்றும் பலர் நடித்த

# அருணகிரிநாதர்

இசை: சாலஞ்சென்ற ஜி. ராமநாதன், ரி. ஆர். பாப்பா

டைரக்ஷன்: ராமண்ணு.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) காமினி பொன்சேரா - ஜீவராணி நடித்த

சனசும கொத்தனத்த

(சிங்களம்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "அஹிம்சை எமது ஆயுதம்; சத்திய வாழ்வு எமது இலட்சியம் அச்சமின்றி மன உறுதியுடன் எதிர்காலத்தை நோக்குவோம்"

## செங்கோட்டையில் பிரதமர் இந்திரா அறைகூவல்

செங்கோட்டை (புதுடில்லி), ஆகஸ்ட் 16

மகாத்மாகாந்தியின் நெறிகளிலிருந்து தவருமல் அஹிம்சை வழியில் சென்றுகொண்டிருக்கும் இந்திய மக்களாகிய நாம் ஒற்றுமையுடன் ஐக்கியமாக அச்சமின்றி சத்திய வாழ்வு வாழ்வோம். நமக்குச் சுதந்திரத்தைத் தேடித்தந்த தேசபக்தர்களின் வாழ்க்கை எமக்குத் தொடர்ந்து வழிகாட்டுகிறது. நாட்டின் எதிர்கால சந்ததியினராகிய இளையவர்கள் புதிய வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். ஜனநாயக வழிகளாக அவை அமையவேண்டும்" என்று இன்று காலை செங்கோட்டையில் இந்திய சுதந்திர தினக் கொடியை ஏற்றிவைத்து உரை நிகழ்த்துகையில் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறினர்.

### 20-வது சுதந்திர தினம்

பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்னர் சுதந்திரமடைந்த இந்தியா இன்று இருபதாவது ஆண்டுக்குள் அடியெடுத்து வைத்தது. 19 ஆண்டுகளுக்கு முன்னர் செங்கோட்டைச் சதுக்கத்தில் ஏற்றிவைக்கப்பட்ட சுதந்திர இந்தியக்கொடியை இந்தியாவின் முதற் பெண் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்றுகாலை ஏற்றிவைத்தார்

### கொட்டும் மழையில் . . .

லட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்த செங்கோட்டைச் சதுக்கத்துக்கு பிரதமர் திருமதி இந்திராகாந்தி வந்து சேர்ந்தபொழுது பலத்த மழை பெய்துகொண்டிருந்தது. பாதுகாப்பு மந்திரி திரு. வை. பி. சவான் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை எதிர்கொண்டு வரவேற்ருர். பிரதமருக்கு முப்படைகளும் மரியாதைசெலுத்தின. பதினுன்குபேரின் குழல்நாதம் ஒலிக்க, தேசிய கீதம் இசைக்க, பிரமர் திருமதி இந்திராகாந்தி இந்திய மூவர்ண சுதந்திரக் கொடியை ஏற்றிவைத்தார். அப்பொழுது முப்பத்தியொரு தடவைகள் பீரங்கிகள் முழக்கமிட்டன. கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் அலைபோன்று திரண்டிருந்த மக்கள் வெள்ளத்துக்கிடையே பரவலாக வெளிக்கிழம்பிய சுரகோஷம் விண்ணையே பிளப்பதாக அமைந்திருந்தது.

### முதல்தடவையாக டெலிவிஷன

இந்திய சுதந்திரதினத்தன்று பிரதமர் சுதந்திரக் கொடியை ஏற்றிவைத்து உரைநிகழ்த்துவது வருடந்தோறும் நடைபெறுகிறது. இவ்வருடம் முதற் தடவையாக திருமதி இந்திராகாந்தி சுதந்திரக் கொடியை ஏற்றிவைத்து உரை நிகழ்த்தினர்.

முதற்தடவையாக இவ்வருடம் டெலிவிஷன் காமராக்கள் சுதந்திரதின வைபவங்களை ஒளிபரப்பியது.

### பிரதமர் பேச்சு

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி செங்கோட்டைச் சதுக்கத்தில் தமது முதலாவது சுதந்திர தின உரையை இன்றுகாலையில் நிகழ்த்துகையில், இந்தியாவின் அடிப்படைக் கொள்கைகளையும் தற்போதைய நிலையையும் எதிர்கால நெருக்கடிகளையும் தெளிவாக விளக்கினுர்.

''நாடு முன்னேறுவதற்கு குறிப்பாக ஒவ்வொருவரினதும் முன்னேற்றமும் அவசியமாகும். நாம் கடைப்பிடிப்பது அஹிம்சை முறை. பலாத்காரம் எமக்கு வேண்டாத ஒரு கருவி. எமக்கு அச்சம் தேவையில்லை. ஐக்கியம், ஒருமைப்பாடு, எதையும் சாதிக்கும் திறமை, உறுதி எமக்கு வேண்டும்'' என்று பிரதமர் திருமதி இந்திராகாந்தி குறிப்பிட்டார்.

வெளிநாட்டு நெருக்கடிகள்பற்றி அவர் தெரிவிக்கையில், நாம் முன்னேறத் துடிக்கின்ருேம். இது சில நாடுகளின் கண்களைக் குத்துகிறது. எமக்குத் தடையாக இருப்பதே அந்த நாடுகளின் நோக்கமாகவுள்ளது என்று விளக்கினுர்.

ஏகாதிபத்தியத்தை நாம் எப்பொழுதும் எதிர்க்கின்ருேம். ஏகாதிபத்தியவாதிகளை எதிர்க்கும் நாடுகளுடன் நாம் இணைந்திருக்கின்ருேம் என்றும் பிரதமர்தெரிவித்தார்.

''காந்திஜியின் பாதை எமக்கு வழிகாட்டுகிறது. அஹிம்சை எமது கொள்கை. அதுவே எமது ஆயுதம். சத்திய நெறியில் நாம் செல்கின்ருேம். அச்சமின்றி மன உறுதியுடன் எதிர்காலத்தை நோக்குவோம். நமது முன்னேற்றம் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் அமைந்திருக்கிறது. அதனை அடைவதற்கு ஒற்றுமை, பயமின்மை, ஒரேவழி' அவசியமாகும்'' என்று பிரதமர் தெரிவித்தார்.

# சந்திரனை வலம்வரும் விண்வெளிக்கப்பல்

### இருண்டபகுதிகளைப் படம் பிடித்தனுப்பும்

ஹவுஸ்டன், ஆக. 15

சில தினங்களுக்கு முன்னர் சந்திரனை நோக்கி அமெரிக்கா அனுப்பிய விண்வெளிக் கப்பல், சந்திரனை வலம்வரும் பாதைக்குச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காமராவுடன் பொருத்தப்பட்ட இந்த விண்வெளிக் கப்பல், இப்பொழுது சந்திரனை வலம்வந்து கொண்டிருக்கிறது. சந்திரனுக்கு மிகவும் சமீபமாகச் செல்லும் பொழுது இக்கப்பலின் காமராக்கள் பல புகைப் படங்களைப் பிடித்து பூமிக்கு ஒளிபரப்பும். சந்திரனின் இருண்ட பகுதிகளைப் படம் பிடிப்பதே இக் கப்பலின் முக்கிய பணியாகவிருக்கும்.

சந்திரனில் விண்வெளி வீரர்கள் இறங்கக்கூடிய பகுதிகளைத் தேர்ந்தெடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

# போலி இளவரசர் ஏமாந்தார்!

ஜேர்மனி, ஆக. 15

விடுதிச் சொந்தக்காரர் ஒருவரான 27 வயது டியெற்றர் ஸ்டிராஸர் குள்ளமானவர், தடித்தவர். அவரது தலைமயிரும் கொட்ட ஆரம்பித்துவிட்டது. ஏதாவது செய்து தனது மதிப்பை உயர்த்த வேண்டுமென்று நினைத்தார் அவர்.

பத்திரிகைகளில் பின்வருமாறு விளம்பரம் செய்தார். ''சொந்த நாட்டுப்புற வாசஸ்தலம், நிறையச் சொத்து, கார் உடைய இளவரசன், வாழ்க்கைத் துணையியாக்க ஓர் 'இளவரசி'யை வேண்டுகிருன். நல்ல இதயம் இருக்க வேண்டும்.

ஜேர்மனியின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து 82 பெண்களின் கடிதங்களும் புகைப்படங்களும் வந்து குவிந்ததைக் கண்டு, விடுதிக்காரர் ஸ்டிராஸர் ஆச்சரியத்தில் மூழ்கினுர். அவர்களில் அநேகர் தம்மையே திருமணஞ் செய்யும் படி மன்ருடினர். ''என்னை உனது இளவரசியாக்கிவிடு'' என்று கெஞ்சினர்.

தேவைக்கும் அதிகமான பெண்கள் தன் வசப்பட்டிருப்பதைக் கண்ட ஸ்டிராஸருக்கு ஒரு யோசனைதோன்றியது. இவ்வளவுதூரம் உற்சாகப்படும் இப்பெண்களிடம் ஏன் சிறிது பணம் பறிக்கக்கூடாது? அவன் ஒவ்வொருத்திக்கும் தனித்தனியே கடிதம் போட்டான். கடிதம் இப்படி அமைந்தது.

''நீ தான் எனது இளவரசியாக வருவதற்குத் தகுந்த இலட்சியப் பெண். இன்னுமொரு நாளில் எனது கோட்டைக்கு உன்னை அழைப்பேன். அங்கு எனது ஊழியர் உன்னை எனக்கு அறிமுகப்படுத்தி வைப்பர். இதற்கிடையில் உனது நம்பிக்கையின் சின்னமாக 10 பவுண் பணம் எனக்கு அனுப்பி வை.

இருபது பெண்கள் அவ்விதம் பணம் அனுப்பினர். ஸ்டிராஸர் பணத்தைப் பெற்றதுதான் தாமதம், அவரது விடுதியைப் பொலிசார் முற்றுகையிட்டனர். நம்பிக்கைத் துரோகமான வழிகளில் பணம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஸ்டிராஸர் 900 பவுண் அபராதம் விதிக்கப்பட்டதுடன், ஐந்துமாதச் சிறைத்தண்டனையும் பெற்ருர்.

---

### 360 விருதுகள்

புதுடில்லி, ஆக. 15

இந்திய சுதந்திரதினத்தையொட்டி ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் 360 விருதுகளை இன்று வழங்கினுர். பல்வேறு துறைகளிலும் திறமையுள்ளவர்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டன.

# "நீண்ட கடினமான அபாயகரமான ஆண்டுகள்"

### ராதாகிருஷ்ணன் செய்தி

புதுடில்லி, ஆக. 15

நீண்ட கடினமான அபாயகரமான ஆண்டுகளை நாம் எதிர்நோக்கியுள்ளோம். சிரமமாகவுள்ள இந்த நாட்களை ஜனநாயக வழிகளில் நம்பிக்கையுடன் சமாளிப்போம்'' என்று இந்திய சுதந்திரதினம் குறித்து நேற்றிரவு இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் வானெலியில் உரைநிகழ்த்துகையில் தெரிவித்தார்.

வெளிநாட்டு நெருக்கடிகள் குறித்து அவர் தெரிவிக்கையில் ஆக்கிரமிப்புக்களைச் சமாளிக்க நாம் தயாராகவிருக்கின்ருேம் என்று எச்சரித்தார்.

### பாகிஸ்தான் உறவுகள்

பாகிஸ்தான் — இந்திய உறவுகள் பற்றிக் குறிப்பிடுகையில் ''பாகிஸ்தான் எமது அண்டைநாடு. இனவழியில் இரு நாடுகளும் ஒன்றுபட்டிருக்கின்றன. ஏன் இரு நாட்டினரும் ஒருவராகக் கூடாது'' என்று ராஷ்டிரபதி கேட்டார்.

பாகிஸ்தானுடன் உறவுகளை விருத்திசெய்யவே இந்தியா விரும்புகிறது. டாஷ்கண்ட் வழியில் இதனைச் சுலபமாக ஏற்படுத்தலாம் என்று அவர் கோரினுர்.

வியட்னும்நெருக்கடிபற்றி அவர் தெரிவிக்கையில் அங்கு நடக்கும் யுத்தத்தின் கொடுமைகளைக் கண்டு இந்தியா ஆழ்ந்த கவலைகொண்டிருக்கிறதென்றும் போர் பரவுவதைத் தடுக்காவிட்டால் உலகம் மற்றுமொரு நெருக்கடியைச் சமாளிக்க நேரிடுமென்றும் எச்சரித்தார்.

### உணவு நெருக்கடி

இந்திய உணவு நெருக்கடி குறித்து டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறுகையில், உணவு தானிய விஷயங்களில் நாடு சிலவருடங்களில் தன்னிறைவு பெற்றுவிடுமென்று நம்பிக்கை தெரிவித்தார்.

இதற்கு வசதியில்லாமலும் முணுமுணுப்பு இல்லாமலும்வாழ மக்கள் தங்களைப் பழக்கிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

### தமிழ் நாட்டில்

இந்திய சுதந்திரதினம் இன்று தமிழ் நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை கோட்டையில் கவர்னர் உஞ்ஜில்சிங் கொடிஏற்றி வைத்ததைத் தொடர்ந்து சுதந்திர தின நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

அரசாங்க காரியாலயங்களில் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

வியட்னும் நெருக்கடி

# ஜோன்ஸன் - படைத்தளபதி இரகசிய ஆலோசனை

## தென் வியட்னுமில் ஒரு லட்சம் வட துருப்புகள் உள்ளனவாம்

டெக்ஸாஸ், ஆக. 15

தென்வியட்னுமிலுள்ள அமெரிக்க படைத்தளபதி ஜெனரல் வெஸ்ட் மோறன், நேற்று டெக்ஸாஸில் அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸனைச் சந்தித்து வியட்னும் நிலைமைகுறித்து இரகசிய ஆலோசனை நடத்தினுர்.

அதிபர் ஜோன்ஸனுக்கும் படைத்தளபதிக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களின் விபரங்கள் வெளியிடப்படாதபோதிலும், வியட்னுமில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளைச் சமாளிக்கும் நடவடிக்கைகள் குறித்தே [illegible] நம்பப்படுகிறது.

இப்பேச்சுக்களின் பின்னர் ஜெனரல் வெஸ்ட் மோறன் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவிக்கையில், தென் வியட்னுமில் ஒரு லட்சத்துக்குமதிகமான வியட்னும் துருப்புகள் இருக்கின்றன என்று கூறினுர்.

தென்வியட்னுமில் அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

### குழந்தைகள் திரைப்பட சங்கம்

சென்னை, ஆக. 15

சிறுவர்கள் திரைப்பட சங்கமொன்றை தமிழ்நாடு முதன்மந்திரி திரு. எம். பக்தவத்சலம் இங்கு ஆரம்பித்துவைத்தார். இச்சங்கத்தில் ஏழு வயதுக்கு மேற்பட்ட பாடசாலைக்குழந்தைகள் அங்கத்தவர்களாகவுள்ளனர்.

உலகம் முழுவதிலும் குழந்தைகளுக்காகத் தயாரிக்கப்படும் சிறந்த திரைப்படங்களை வரவழைத்து இவர்களுக்கு காண்பிப்பது சங்கத்தின் நோக்கமாகும். இதற்காக இங்கு 4 இடங்களில் சிறுவர்களுக்கென்று தியேட்டர்கள் அமைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருடைய கருத்துப்படி நடக்கவேண்டாம், உங்கள் உள்ளிருந்து எழும்குரலை எப்போதும் கேட்டு அதன்படி நடவுங்கள். போனதைப்பற்றிக் கவலையோ, இனிவருவதைப்பற்றிப் பீதியோ கொள்ளாமல், தெய்வத்தை நம்பி அதன்வழி நடப்பதே இன்பத்துக்குச் சரியான வழி

—சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 289

31 16-8-66

## இந்திய - பாகிஸ்தான் சுதந்திரம்

இந்தியாவும் பாகிஸ்தானும் அரசியல் சுதந்திரம் பெற்று நேற்றுடன் பத்தொன்பது ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. இருநாடுகளும் நேற்று சுதந்திர தினத்தைக் கொண்டாடின. ஒரே நாடு. ஒரே மக்களுக்காக வாழ்ந்தவர்கள் தனித் தனியாகப் பிரிந்து சுதந்திரம் பெற்றனர். சுதந்திரத்தின் பின்னர் இரு நாடுகளுக்கும் பலப்பல சோதனைகள் ஏற்பட்டன. இன்னும் சோதனைகள் நீங்கவில்லை. இருபதாவது இளம் பராயத்தில் இரு நாடுகளும் காலடி எடுத்து வைக்கின்றன. இந்திய விடுதலையின் மூலம் இலங்கை உள்ளிட்டு ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பல விடுதலையடைந்தன. பெற்றசுதந்திரத்தைப் பேணிக்காப்பதிலும் இந்திய உபகண்டத்தையே இந்த நாடுகளும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் சென்ற சில வருடங்களில் உறவு சீர்குலைந்தது மட்டுமன்றி சகோதரர்போல் வாழ்ந்த இருநாட்டவரும் ஆயுதங்களேந்தி ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளவும் ஆரம்பித்தனர். ஒருவரையொருவர் சந்தேகக்கண்கொண்டு நோக்குவதும், 'எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்' என்ற போக்கைக் கடைப்பிடிக்கும் வெளியார் இருநாடுகளுக்கும், தமது சுயநலம் கருதி ஆயுதங்களை அளித்து வந்ததும் இந்தத் துரதிர்ஷ்ட நிலைக்குக் காரணமாகும். பல்லாண்டு காலமாக ஆட்சி புரிந்து வந்த அன்னியர், மூட்டை முடிச்சுக்களுடன் வெளியேறியபோது உள்நாட்டவருக்கிடையில் 'சிண்டு முடிந்துவிட்டு'ச் சென்றனர். இது அந்நியர் கையாண்டுவரும் தந்திரம். இந்திய உபகண்டத்தைவிட்டு வெள்ளையர் வெளியேறுகையில் ஏற்படுத்திவிட்டுச்சென்ற "காஷ்மீர் பிரச்னை" தான் இந்திய-பாகிஸ்தான் உறவு சீர்கேடடைந்ததற்கும் இருதரப்பினரும் மோதிக்கொள்வதற்கும் முக்கிய காரணமாகும். நிலைமை மோசமாகாமல் 'தாஷ்கண்ட்' உடன்படிக்கை தடுத்து உதவி புரிந்தது என்றாலும் எதிர்பார்த்த அளவுக்கு இன்னும் நிலைமை சீரடையவில்லை. அச்சமும், சந்தேகமும் இருதரப்பினரையும் விட்டு நீங்கவில்லை. இருவரும் தங்கள் பாதுகாப்புக்கென பல கோடி ரூபாய்களைச் செலவிடுகின்றனர். இதன் விளைவாக இருநாடுகளின் முன்னேற்றமும் தடைபடுகின்றன. மக்கள் கஷ்டமடைகின்றனர்.

இருநாட்டினருக்கிடையிலும் கைகலப்பு நேர்ந்தபோதிலும் பகை ஏற்பட்டபோதிலும் இருதரப்பினரும் அரசியல் உறவை துண்டித்துக் கொள்ளவில்லை; வர்த்தக உறவு நீங்கிவிடவில்லை. இருநாடுகளுக்கிடையிலும் மீண்டும் நட்புறவும் நல்லெண்ணமும் ஏற்படமுடியுமென்பதற்கு இவை நம்பிக்கையளிப்பதாகும்.

அயல் நாடான பாகிஸ்தானுடன் இந்தியா நட்புறவுடன் வாழமுடியுமென்ற நம்பிக்கை இருப்பதாகவும் 'தாஷ்கண்ட்' உடன்படிக்கையின் மூலம் இதை அடையமுடியுமென்றும் இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தமது சுதந்திர தினச் செய்தியில் தெரிவித்திருக்கிறார். 'தாஷ்கண்ட்' உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட அதே உணர்வுடன் அதை இருதரப்பினரும் செயல்படுத்தினால் இரு நாடுகளுக்குமிடையிலுமுள்ள பிரச்னைகள் நீங்கி நட்புறவு வளர்ந்து இந்திய உபகண்டத்தில் மட்டுமன்றி ஆசியாவிலேயே அமைதிநிலவும். டாக்டர் ராதா கிருஷ்ணன் குறிப்பிடுவதுபோல ஜனநாயக வழியில் பேச்சுவார்த்தைகள் மூலம் சிறுவுடனுள்ள பிரச்னைகள் உட்பட எப்பிரச்னைக்கும் சுலபமாகத் தீர்வுகாணமுடியுமென்பதே அமைதியை விரும்பும் மக்களின் நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை வீண்போகக்கூடாது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் அதற்கு வெளிநாட்டு ஆபத்துக்களும் தொல்லைகளும் மட்டுமன்றி உள்நாட்டிலும் பலவித இடையூறுகள் உள்ளன. உணவு நெருக்கடி, ராஜ்யங்களுக்கிடையில் எல்லைத் தகராறு போன்ற தொல்லைகள் அதிகம்.

காந்திஜி காட்டிய அகிம்சை வழியே இந்தியாவுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தது. இன்று இந்தியாவில் நடைபெறும் சில பலாத்காரச் சம்பவங்களைப் பார்க்கையில், இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, கவலையுடன் குறிப்பிட்டதுபோல், இந்திய மக்கள் காந்திஜியையும், அகிம்சையையும் மறந்து வருவதுபோல் தோன்றுகிறது. இந்திய விடுதலையின் சிறப்பு அம்சமே அகிம்சை மார்க்கம் தான் என்பதை இந்திய மக்கள் மறந்துவிடுவார்களானால் இந்தியாவின் பெருமைக்கே அது இழுக்கு. சுதந்திரம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. பெற்ற சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்கவும்வேண்டும். இதுவே முக்கியம். அகிம்சை வழியை மறந்து பலாத்கார வழிகள் மூலம் தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளலாமென இந்திய மக்கள் நினைப்பார்களாயின் அதைவிடப் பெரிய தவறு இருக்கமுடியாது. உள்நாட்டுப் பிரச்னைகள் அனைத்தையும் அகிம்சை வழியில், காந்திஜி காட்டிய மார்க்கத்தில் தீர்வு கண்டு, இந்திய [illegible] விடுதலை பெற்ற நாடுகளும், தமது சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்க வழிகாட்ட வேண்டிய [illegible] இந்தியாவின் மீது தங்கியுள்ளது.

இன்று ஆடி அமாவாசை

# தமிழாளியார் கண்ட தென்கயிலை

— ஸத்துவன் திருமதி வசந்தா வைத்தியநாதன் —

சிவபெருமான் உமாதேவியாரொடு சொலுவீற்றிருந்து அருளரசோச்சும் இடங்களுள் முதன்மையானது திருக்கயிலாயம். அளக்கலாகா அளவும் பொருளும், துளக்கலாகா நிலையும் தோற்றமும் வறப்பினும் வளந்தரும் மலையிலக்கணம் முழுதும் பெற்றது இமயப் பெருமலை. இப்பேரிமயத்தின் வடக்கே எல்லை கடந்த இமய மணிமுடியாக விளங்குவதே திருக்கயிலைச் சிகரம். இச்சிகரம் கடல்மட்டத்தினின்று 22,023 அடி உயரம் உள்ளது. இங்கு இறைவன் விராடரூபமாக விளங்குகின்றான்.

"நீடுதேவன் நிலைகளும் வேண்டிடின் நாடும் ஐம் பெரும் பூதமும் நாட்டுவ" என்று சேக்கிழார் சுவாமிகள் இம்மாமலையைப் போற்றுகின்றார் நிலம் நீர், தீ வளி, வெளி ஆகிய ஐம்பெரும் பூதங்களும் பெருமானை இங்கே ஆரத்தழுவி, அகங்குழைந்து வழிபடுகின்றன. இயற்கை இயற்றும் வழிபாட்டுமுறை இது. இக்கயிலைப் பனிவரையைச் சிவமாகவும், மானசரோவரத் தடாகத்தைச் சக்தியாகவும் கண்டனர் நம்முன்னோர். இஃது இந்துக்களுக்கு மட்டுமின்றி, எல்லா இனத்தவர்களுக்கும் பொதுவாகவே இலங்குகின்றது. பௌத்தர்கள் இதனை ஆதிபுத்தர் எனவும், திபேத்திய லாமா மதத்தினர் மகாமேரு, காங்ரிம்போக், காங்கிரிபாப்-சென்போ, என்றும், பலவாறு அழைக்கிறார்கள். ஜைனர்கள் அஷ்டபதம் என்றும் சீனர்கள் க்வெனலன் என்றும் கூறுகிறார்கள். இவ்வாறு எம்மதத்தினர்க்கும் சம்மதமாய் தனக்கே உரிய சிறப்போடு துலங்குகின்றது கயிலாயப் பெருவரை.

'இத்துணை சிறப்புப்பொருந்திய இவ்வெள்ளி வெற்பை காழியர் தவமாகவும், கவுணியர் தனமாகவும், கலைஞானத்தின் ஆழியகடலாகவும் திகழ்ந்த புகலிப் பெருவேந்தர் திருக்காளத்தி மலையிலிருந்தே தரிசித்துத் திருப்தியடைந்தார் ஆனால் நமது வாகீசப் பெருந்தகையோ, திருக்காளத்தி மலைக்கொழுந்தை தொழுதபோழ்து, வடகயிலை மன்னியவனையும் வணங்க உன்னினார். எண்ணத்திலே திண்ணியரானார். இடையிட்ட நாடுகள் பல கடந்து, கற்சுரத்திலே கால்கடுக்க விரைந்தார். உறக்கத்தை மறந்தார். ஆனால் ஊக்கத்தை மறக்கவில்லை. உணவைத் துறந்தார்...... ஆனால் இறை உணர்வைத் துறந்தாரில்லை. கால்கள் பரடுவரை தேய்ந்தன. தசைநார்கள் வெளிப்பட்டன. தளரவில்லை. கைகளின் துணைகொண்டு தாவித்தாவி ஏறினார். கைகளும் தேய்ந்தன. மலைக்கவில்லை மார்பினால் உந்தி, உந்தி நகர்ந்தார். தசைகள் நைந்து நைந்து, எலும்புகள் சிதறி, குருதி ஆறாகக் கொப்புளித்தது. புரண்டு உருண்டு ஏறினார். இறுதியில் ... ... புறத்துறுப்புக்கள்செயலிழந்தன. அகத்துணர்வும் ஒடுங்கத் தலைப்பட்டது.

இந்நிலையில்...... தமிழாளியாரின், தமிழ்ப்பணி மேலும் தம்முலகிற்குக் கிடைக்கவேண்டும் என்று திருவுளப்பற்றியபெருமான் திருக்கயிலை அணைவதற்கு அருளாமல் உணர்வற்ற அவர்முன் தளர்வுற்ற மூப்புடன் தோன்றினார் அருகிலே அழகிய பொய்கையையும் தோற்றுவித்தார்.

திருநாவுக்கரசரின் திடசித்தத்தை தரணியுள்ளோர்க்கு உணர்த்த எண்ணிய பெம்மான், பெருந்தகையை நோக்கி "திருக்கயிலை மாமலை விண்ணோர்களும் அணுகுதற்கரியது. மானிடர்களால் அடைய வொண்ணாது ஆகையால் வந்தவழி மீளுவதே சிறந்தது" என்று அருளினார். இதனைச் செவியுற்ற நம் செந்தமிழ் விரகரோ, "எம்பெருமானது திருக்கயிலைக் காட்சியைக் கண்டல்லாது, மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என மறுத்தார்.

"மீளும் அத்தனை உமக்
கினிக்கடன் எனவிளங்கும்
தோளும் ஆகமும் துவளும்
முந்நூல்முனி சொல்ல
ஆளும் நாயகன் கயிலையில்
இருக்கை கண்டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டு
மீளேன் என மறுத்தார்."

என்ன திண்மை! எத்தகைய உறுதி! 'நாமார்க்குங் குடியல்லோம், நமனையஞ்சோம்' என்று திருவருள் முழக்கமிட்ட தவராஜ சிங்கமல்லவா?

அடியவர்களைச் சோதனை செய்வது ஆண்டவனுக்கு ஓர் விளையாட்டுப் போலும் ....... சுடச்சுடத்தானே பொன்னுக்கு ஒளி. இழைக்க இழைக்கத்தானே சந்தனத்திற்கு மணம் முதிர முதிரத்தானே, முத்தினுக்கு மதிப்பு. இத்துணை சோதனைக்குப் பின்னரே, தனது உண்மை உருவை, உருகும் அடியவருக்கு உணர்த்த எண்ணிய பெருமான், அசரீரியாக, "ஓங்கும் நாவினுக்கரசனே! எழுந்திரு" என்றருள் செய்தார். அக்கணமே ஊறு அற்ற உடலுடனும், ஒப்பற்ற அழகுடனும், திருமேனி ஒளிவிளங்க வாகீசர் எழுந்து,

"அண்ணலே! எனை ஆண்டு
கொண்டருளிய அமுதே!
விண்ணி லேமறைந்
தருள்புரி வேதநாயகனே!
கண்ணி னால்திருக் கயிலையில்
இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ
நயந்தருள் புரி எனப்
பணிந்தார்"

அதுபோழ்து இறைவனும்

(5-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுகிறது

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று பெரியார்களுக்கு மதுரை ஆதீனத்தார் கௌரவப்பட்டங்கள் வழங்கியுள்ளனர். அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்களுக்கு "சிவாகமஞான பானு" எனவும், பண்டிதர் வ. மு. இரத்தினேசுவர ஐயருக்கு "புலவர் சிகாமணி" என்றும், கொக்குவில் திரு. த. குமாரசாமிப்புலவருக்கு "சிவகதாப்பிரசங்க பூஷணம்" எனவும பட்டங்கள் அளித்து கௌரவித்திருப்பது போற்றத்தக்கது.

தமிழுக்கும் சைவத்துக்கும் இம்மூன்று பெரியார்களும் செய்துள்ள பணிகள் கொஞ்சமன்று ஈழத்துப் பெரியார்களைத் தாயகம் மதித்துக் கௌரவித்திருப்பது பெருமைப்படத்தக்கதுடன், இரு நாடுகளுக்கும் நெருங்கிய உறவுகள் பலப்படவும் இது உதவுவதாகும் பட்டம்பெற்ற இம்மூன்று பெரியார்களையும், ஈழத்தில் தக்கபடி கௌரவித்துப் போற்றுவது அப்பெரியார்களுக்கு இங்கு சமூகம் செய்ய வேண்டிய கடமை இதனால் இவ்வித பொதுத் தொண்டிலே மற்றும்பலர் ஈடுபடவும் உற்சாகமூட்டுவதாக இருக்கும்.

தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்தால் இவ்வித பெரியார்களுக்கு கனகாபிஷேகம் செய்து, மானியங்கள் அளித்துக் கௌரவிப்பார்கள். தமிழ் மன்னர்கள் இல்லாத நிலையில், ஜனநாயக ஆட்சியிலே மக்கள்தான் நம் பெரியோர்களை கௌரவிக்க வேண்டும். கவலையில்லாமல் அவர்கள் ஜீவனம் நடத்துவதற்கான வசதிகளையும் செய்ய வேண்டும். இப்படிப் பட்டவர்களைக் கௌரவிப்பது தமிழ் சைவசமூகம் தன்னைத்தானே கௌரவித்துக் கொண்டதாகும்.

ஃ ஃ ஃ

மட்டக்களப்பிலிருந்து ஓர் இஸ்லாமிய அன்பர் சென்ற ஞாயிறன்று வந்து தாம் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தேர் பார்க்க வந்ததாயும், ஆடிஅமாவாசையை முன்னிட்டுத் தாம் விரதம் இருப்பதாகவும் சொன்னதும் நம்ப முடியவில்லை எச்சில்கூட விழுங்காமல் துப்பிக் கொண்டிருந்தார் அவர் கதிர்காமம் சென்று ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் உணவருந்தி, தீர்த்தத் திருவிழாவில் நீராடியதாகவும் மிகப் பண்புடன் பேசினார்

சமய விஷயத்திலே இவ்வித சமரச மனப்பான்மை வளர்ந்து எல்லா மக்களும் எல்லாச் சமயங்களையும் மதித்து நடப்பதாயின் நம் நாடு எவ்வளவு முன்னேறும்!

சைவசமய உண்மைகளையும், திருவிழா நோக்கங்களையும் தெளிவாக சிறு சிறு நூல்களாக தமிழ், சிங்களம், ஆங்கிலம் முதலிய மொழிகளிலும் வெளியிட்டால், பல தப்பெண்ணங்கள் நீங்கவும், தத்துவங்கள் விளங்கி ஒற்றுமை வளரவும் செய்யும்.

ஃ ஃ ஃ

ஒருநாளில் நம்மை நாலைந்து பேர் வந்துபார்க்க வந்துவிட்டால், மிகப் பெரிய மனிதராகிவிட்டதாகக் கருதுகின்றோம். ஆனால் மாவிட்டபுரம் கந்தசுவாமியைப் பார்க்க பல்லாயிரக்கணக்கிலே தூர இடங்களிலிருந்தெல்லாம் பக்தர்கள் குடும்பம் குடும்பமாக வந்து தரிசிப்பதாயின், அவரது மகிமை எவ்வளவு இருக்க வேண்டும்!

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

மாவிட்டபுரத்தில் வழக்கம்போல் பல தண்ணீர்ப்பந்தல் தர்மங்கள் நடந்தன வேதபாராயண, தேவார பஜனைக் கோஷ்டிகள் தெருவெல்லாம் முழங்கின போக்குவரத்து, சுகாதாரம் முதலிய ஒழுங்குகளை அதிகாரிகளும் சாரணர்களும் செய்தனர்.

ஃ ஃ ஃ

பண்டானைப் பரந்தானைக் குவிந்தான் தன்னைப் பாரானை விண்ணாயிவ் வுலகமெல்லாம், உண்டானை உமிழ்ந்தானை உடையான் தன்னை யொருவருந்தன் பெருமைதனை அறியவொண்ணா, விண்டானை [illegible]ண்டார் தம் புரங்கள் மூன்றும் வெவ்வழலில் வெந்து பொடியாகி விழக் கண்டானைக் கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

— அப்பர்சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் தலைவர் காமராஜர் நாடு திரும்பினார்

## சென்னையில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது

சென்னை, ஆக. 15

வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த அகில இந்தியக்காங்கிரஸ் தலைவர் திரு குமாரசுவாமி காமராஜர் இன்று காலை சென்னை திரும்பியபொழுது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ரஷ்யா, கிழக்குஜெர்மனி, செக்கோஸ்லோவேக்கியா, ஹங்கேரி, பல்கேரியா, யுகோஸ்லேவியா ஆகிய நாடுகளில் இருபத்திரண்டு நாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இன்றுமாலை புதுடில்லிவந்துசேர்ந்த திரு. கு காமராஜர் பின்னர் அங்கிருந்து சென்னை வந்துசேர்ந்தார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவருக்குச் சிறப்பானதொரு வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பி ஏற்பாடுகளை தமிழ்நாடு காங்கிரஸ்கட்சி செய்திருந்து விமானத்திலிருந்து திரு. காமராஜர் இறங்கியதும் முதன்மந்திரி திரு. எம். பக்தவத்சலமும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு கிருஷ்ணசாமி நாயுடுவும் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர்.

இதன்பின்னர் அவர் திறந்த காரில், தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானம்வரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். வழிநெடுகிலும் வரவேற்பு வளைவுகளும் அலங்காரப்பந்தங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான கார்கள், பஸ்கள், லொறிகள், ஸ்கூட்டர்கள், ஆயிரக்கணக்கான சைக்கிள்கள் கலந்துகொண்டன.

### உறவுகள் பலம்பெற்றது

புதுடில்லியில் திரு. காமராஜர் பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டியளிக்கையில், தமது விஜயத்தின் மூலம் இந்தியாவின் மதிப்பு உயர்ந்திருக்கிறது என்று கூறினார்.

"நான் சென்றவிடமெல்லாம் இந்தியாவின் சிறப்புப்பற்றி எடுத்துரைத்தேன். வெளிநாடுகளில் எனக்கு நிறைய அனுபவங்கள் ஏற்பட்டன. ரஷ்யாவில் வீடு கட்டும் திட்டம் என்னை வெகுவாகக் கவர்ந்தது" என்று திரு. காமராஜர்கூறினார்.

---

## தமிழ்ஒளியார்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அருகிலுள்ள தடாகத்தைக் காட்டி "நீ இத் தடாகத்திலே மூழ்கி, திருவையாற்றினை அடைந்து, அங்கே நாம் திருக்கயிலையில் வீற்றிருக்கும் காட்சியினைக் காண்பாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார். அவ்வாறே அப்பர் பெருமானும் "வேற்றாகி விண்ணாகி, நின்றாய் போற்றி" என்று துவங்கும் திருத்தாண்டகத்தினால் துதித்தவாறே பொய்கையினுள், திருவைந்தெழுத்தினை ஓதியவாறு மூழ்கி, யாவரும் வியப்ப திருவையாற்றிலே தோன்றினார்.

பின்னர், புலனைந்தும் பொறிகலங்கி, நெறிமயங்கி ஐம்மேலுந்தி, அலமந்த போதாக வந்து 'அஞ்சல்' என்று அருள் செய்வான் உறையும் திருக்கோயில் வலம் வந்தார். அப்பெருங்கோயில், திருக்கயிலையாக, தென்கயிலாயமாக (தக்ஷிண கைலாசம்) காட்சியளிக்கக் கண்டார். எங்கும் தேவதுந்துபி முழக்கம் எங்கணும் வானர மகளிரின் ஆடல் பாடல் அமரர்கள் நிரைநிரையாகச் செல்லும் அழகுக் காட்சி திருக்கோயிலின் உள்ளே சென்றார். தன்னை மறந்தார். அங்கே.....

"வெள்ளி வெற்பின்மேன்
மரகதக் கொடியுடன்
விளங்கும்
தெள்ளு பேரொளிப்
பவளவெற் பெனஇடப்
பாகம்
கொள்ளு மாமலை யாளுடன்
கூடவீற் றிருந்த
வள்ளலாரைமுன் கண்டனர்
வாக்கின் மன்னவனார்."

வெள்ளி வெற்பின் உயரத்தில் பவள வெற்பைப் பற்றிப் படரும் பசுங்கொடி... எத்துணை அழகு... எத்துணை சொல்நயம் இத்திருவருட்பதிவு, சிவமும், சக்தியுமாக அனைத்துயிர்களிடத்தும் இலங்கக்கண்டு, 'மாதர் பிறைக்கண்ணியானை' என்ற பதிகத்தால் போற்றினார். தாண்டக வேந்தர்

இவ்வாறு அப்பர் பெருமானுக்கு திருவையாற்றிலே திருக்கயிலைக் காட்சியினை நல்கியது கயிலைப் பெருவரையினை நினைக்கவும் இயலாத நாமும் உய்யும் பொருட்டுபோலும். இந்த அருட்காட்சி வழங்கிய நாள் ஆடி அமாவாசைத் திருநாளாகும்.

---

## 'கல்விமுறையில் மாற்றம்வேண்டும்'

வவுனியா, திங்கள்

"வெளிநாடுகள்பொருளாதாரத்துறையில் வளர்ச்சி பெற்று, செழிப்புற்றிருப்பதற்கு அங்கு செயல்படும் மாணவர்களின் கல்விமுறையே காரணமாயிருக்கிறது. அரைவாசி நேரம் கல்வியும், அரைவாசிநேரம் பொருளாதாரத்தை உயர்த்தும் உழைப்பிலும் அங்குள்ள மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதேபோன்ற முறை இலங்கையிலும் பின்பற்றப்பட்டால் நாடு செழிப்புறும், எதிர்காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை ஒழிந்துவிடும்."

வவுனியா தமிழ் மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். இராஜநாயகம் வவுனியா அரசினர் பண்ணையில் தமது பாடசாலை மாணவர்களின் களைபிடுங்கு விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இந்தக் களைபிடுங்கு விழாவில் 350 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

உணவு உற்பத்திமேற்பார்வையாளர் திரு. எஸ். கனகநாயகம் இந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தார். ஆசிரியர் திரு. கே. சுந்தரலிங்கம் தலைமையில் இவ்விழா நடந்தது.

---

## மீசாலையில் இசைவிழா

மீசாலை, செவ்வாய்

மீசாலை தமிழிசைச் சங்கத்தினரின் இசைவிழா நாளை வெள்ளைமாலை மாவடிப் பிள்ளையார் கோயில் முன்றலில் ஆரம்பமாகிறது. தொடர்ந்து இம்மாதம் 20-ம் திகதி வரை நடைபெறும்.

நாளை மாலை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் முதல் நாள் இசைவிழா நடைபெறும். இன்னிசைக் கச்சேரிகள் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் திரு. எம். பி. சுப்பிரமணியம்தலைமையிலும், மூன்றாம்நாள் நிகழ்ச்சிகள் திரு சி. உ. சோமசேகரம் தலைமையிலும், இறுதிநாள்நிகழ்ச்சிகள் மட்டுவில் மகாவித்தியாலய அதிபர் திரு. நடராசா தலைமையிலும் நடைபெறும்.

---

## ஐ. நா. உதவியுடன் திட்ட சேவை

கொழும்பு, செவ்வாய்

பொதுச்சேவை அமைப்பினுள் ஓர் திட்ட சேவைக்குப் பயிற்சி அளிக்க ஐக்கிய நாடுகள் விசேஷ நிதி ஸ்தாபனத்திடம் இலங்கை அரசாங்கம் உதவி கேட்கும்.

திட்டம், திட்டம்தயாரிக்குதல் செயற்படுத்தல் ஆகியவற்றில் இலங்கையருக்குப் பயிற்சியளிக்க நிபுணர்களை அனுப்புமாறு ஐ. நா. விசேஷ நிதி ஸ்தாபனத்தை அரசாங்கம் கேட்கவிருக்கிறது.

குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் அபிவிருத்தித்திட்டங்களை முடிக்கவும், திட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கவும் இலங்கையில் ஓர் திட்ட சேவையொன்று அத்தியாவசியமென இங்கு விஜயம் செய்துள்ள உலக வங்கித் தூதுகோஷ்டிகள் பலமுறை வலியுறுத்தி வந்துள்ளன.

இந்த வருட அபிவிருத்தித்திட்டத்துக்கு வெளிநாட்டு உதவிப்பணம் அதிக தொகையில் பயன்படுத்தப் படப்போவதால், இத்தகைய திட்ட சேவை ஒன்று அவசியம் என்றும் கருதப்படுகிறது.

---

## மீண்டும் தலைவர்

சுழிபுரம், திங்

பண்ணாகம் பல நோக்கு கூட்டுறவுச்சங்க வருடாந்தப்பொதுக்கூட்டம் சங்க தெசவுசாலை மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத்தின் புதிய தலைவராக திரு. ச. சம்பந்தமூர்த்தி மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் கூட்டத்துக்கு யாழ் மேற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ் பொன்னுத்துரையும் கலந்துகொண்டார்.

---

## தலைமை ஆசிரியர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், செவ்

அராலி கிழக்கு அமெரிக்கன்மிஷன் பாடசாலை தலைமைஆசிரியர் திரு கா. கந்தசுவாமி வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலைக்கு இம்மாதம் 13ம் தேதியிலிருந்து தலைமையாசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் இந்த இடமாற்றம்உடனடியாகத்தந்தி மூலம் அனுப்பப்பட்டிருந்தது.

இவர்முன்னர் இப்பாடசாலையில் பல வருடகாலம் தலைமை ஆசிரியராகப்பணி புரிந்திருக்கிறார் இங்கிருந்து காரைநகர் மறைஞானசம்பந்த வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு பின்னர் அராலிகிழக்கு அமெரிக்கன்மிஷ பாடசாலைக்கு மாற்றப்பட்டு இப்போது மீண்டும் திருநாவுக்கரசு வித்தியாசாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டிருக்கிறார்.

இவரிடம் கல்விபயின்ற மாணவர்களிற்பலரே இப்பாடசாலையில் இப்போது ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

---

## தேசிய அரசாங்கத்தின் சிறந்த பணி

கொழும்பு, திங்கள்

"சிறுபான்மை மக்களின் தேவைகளைப்பாரபட்சமற்றமுறையில் பூர்த்தி செய்யும் அரசாங்கமே ஒரு சிறந்த அரசாங்கமாக இருக்கும். இந்தவகையில் இலங்கையில் தேசிய அரசாங்கம் பணிபுரிந்து வருவதைப் பார்க்கும் போது மகிழ்ச்சியடைகிறேன்" என்று காயிதே மில்லத் முஹம்மத் இஸ்மையில் ஸாகிப் எம். பி. இங்கு பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டி யொன்றில் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை கொழும்பு வந்து சேர்ந்த இவர் நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

"நான் இந்த நாட்டுக்குப் புதியவனல்ல. இது எனது நான்காவது விஜயமாகும். 1918-ல் முதன் முதலில் ஈழம் வந்தேன். இன்று மீண்டும் இங்கு வந்துள்ள எனக்கு இலங்கை மக்கள் அளித்த மகோன்னதமான வரவேற்பை நான் என்றும் மறக்கமுடியாது. இந்த நாட்டு அரசாங்கத்துக்கும் பாரத நாட்டு மக்களின் நல்லெண்ணத்தையும் அன்பையும் அபிமானத்தையும்தெரிவித்துக்கொள்கிறேன்" என்றும் அவர் தெரிவித்தார்.

---

## பஸ் சேவையை கூட்டுக

-கி.ச தலைவர்

சுழிபுரம், திங்

சாவகச்சேரியில் இருந்து தினமும் சங்கானைவரையும் வந்துபோகும் இ. போ. ச. பஸ் சேவையை மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை வரையும் சேவைக்குவிடுமாறு சுழிபுரம்கிராமசபைத் தலைவர் திரு. சுகந்தசுவாமி இ. போ. ச முகாமையாளரைக்கோரியுள்ளார். இச்சேவையை விஸ்தரிப்பதின் மூலம் இ போ. சாவுக்கு போதிய வருமானமும், மக்கள்சுலபமாக பிரயாணம் செய்யும் வாய்ப்பும் ஏற்படுகின்ற தென் பதைச்சுட்டிக் காட்டியுள்ளார்.

பருத்தித்துறையில் இருந்து மூளாய் வரை ஆரம்பிக்கப்பட்ட பஸ்சேவையின் பலா பலன்களைப்போல சாவகச்சேரி - மூளாய்பஸ் சேவையை ஆரம்பித்தன் மூலம் மக்கள் நன்மையடையலாம் எனவும்தமதுகோரிக்கையில்வலியுறுத்தியுள்ளார், மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதப்பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

---

## வெளிநாடுகளுக்கு எம். பி.க்கள்

கொழும்பு. செவ்வாய்

எமது எம். பி.க்களில் சிலர் வெளிநாடுகள் செல்லவிருக்கிறார்கள்.

செப்டம்பரில் டெஹரானில் நடைபெறவிருக்கும் சர்வதேச பாராளுமன்றச் சங்க மாநாட்டுக்கு அச்சங்கத்தின் இலங்கைக் கிளை எட்டு அங்கத்தவர்களை அனுப்பத்திட்டமிட்டுள்ளது

காமன்வெல்த் பாராளுமன்ற சங்கத்தின் இலங்கைக் கிளை, அச்சங்கத்தின் மாநாடு ஒட்டாவாவில் நடைபெறும்போது ஓர் தூதுகோஷ்டியை அனுப்பும்.

இரண்டும் பாராளுமன்ற மாநாடுகளானபடியினால், பாராளுமன்ற அங்கத்தவர் பலர் வெளிநாடுசெல்ல இடமுண்டு.

---

## வீதிகள் அவல நிலை

வல்வெட்டித்துறை, திங்

உடுப்பிட்டி கிராம சபை பதினைந்தாம் வட்டாரமான வல்வெட்டி வீதிகள் மிகவும் சீர்கேடான நிலையிலிருக்கின்றன. சென்ற சில தினங்களாக இப்பகுதியில் மழை பெய்வதால்வீதிகளெல்லாம் சேறும் சகதியுமாக போக்குவரத்துச் செய்ய முடியாத அவல நிலையிலுள்ளது.

---

## இன்றுசதிவழக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுமென எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் சமர்ப்பிக்கும் மனுபற்றி மாஜிஸ்டிரேட் பரிசிலனை செய்வாரென எதிர் பார்க்கப்படுகிறது.

### மாண்டவர் பற்றிய விசாரணை மனு

இதேசமயம், சதிசம்பந்தமான பொலிசாரின் பூர்வாங்க விசாரணையின் போது பொலிஸ் தலைமைக் காரியாலய மாடிக் கட்டிடத்திலிருந்து விழுந்து மாண்ட தொடம்பே முதலாளியும் மற்றவரினதும் மரணம்சம்பந்தமாக புதிதாக விசாரணை நடத்த வேண்டுமென்றும் இந்த விசாரணையில் சாட்சியமளிக்க சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நான்கு எதிரிகளுக்கு சமன்ஸ் வழங்கப்பட வேண்டுமென்றும்கோரி தொடம்பே முதலாளியின் சகோதரர் தாக்கல் செய்துள்ள மனு இன்று கோட்டை நீதவான் முன் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

இந்த மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு இருவரின் மரணம்பற்றியும் புதிதாக விசாரணை செய்யப்பட்டால் சதிவழக்கு எதிரிகள் நால்வரும் சாட்சியமளிக்கவேண்டி ஏற்படுமாதலால் சதிவழக்கு விசாரணையில் சிறிது தாமதமேற்படக் கூடும் எனக் கூறப்படுகிறது.

---

## மரண அறிவித்தல்

சந்தியோ அந்தோனிப் பிள்ளை—அன்னம்மாவின் அன்புக் கணவரும் கொழும்பு மேட்டுத்தெரு அர்ச். அன்னம்மாள் பாடசாலை ஆசிரியை திருமதி பிருஸ்சில்கா யோசேப், இ போ. ச. மன்னார் திரு. ஸ்ரீபன், இ. போ. ச. மட்டக்களப்பு, திரு. எட்வேட், பாஷையூர் இறப்பியல் மடம். சகோ. சகோதரி மேரிலூயிஸ், இலங்கை தேசிய குருமடம், சகோ. சகோதரன் பிரன்சிலாஸ், பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், கண்டி, செல்வன் பெறூம், யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி, யேம்ஸ், யாழ். கன்னியர் தமிழ்ப் பாடசாலை, இருதய தாயகி ஆகியோரின் அன்புத்தந்தையும், கொழும்பு மேட்டுத்தெரு அர்ச் அந்தோனியார், பாடசாலை ஆசிரியர் திரு யோசேப், திருமதி மேரிகிட்டா மங்கெலியா அர்ச். சூசையப்பர் பாடசாலை, ஆசிரியை திருமதி மகேஸ்வரி ஆகியோரின் அருமை மாமனாரும் ஆகிய திரு சந்தியோ அந்தோனிப்பிள்ளை அவர்கள் 15-8-66-ல் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் 16-8-66 பி ப 5 மணியளவில் 42/5, மவுண்ட்கார்மேல் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு அர்ச். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை நண்பர்களும் உறவினர்களும் ஏற்றுக் கொள்ளவும். 852

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யூகோஸ்லாவியாவில் எழுத்து

— லாவ் சகாரேவ் —

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னர் கடந்த இருபது வருடங்களில் யூகோ நாட்டின் இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்களின் 800 நூல்கள் 35 மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் 85 கவிதைத் தொகுதிகளும் இந்தக்கால எல்லைக்குள் பிறமொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன.

இருபது வருடங்களில் அன்டிறிச் என்பவரின் 154 பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. இன்றுவரை இவரது படைப்புக்கள் 28 மொழிகளில் வெளியாகியுள்ளன.

நியூயோர்க் டைம்ஸின் இலக்கிய விமர்சகரான டோயின் இறிஸ்டோவ் தனது விமர்சனத்தில் 'அன்டிறிக் ஓர் அறிஞர், தத்துவ ஞானி. அத்துடன் ஓர் கலைஞருங்கூட. இவர் குழப்பமான விடயங்களைப் பற்றியும், நூதனமான பிரகிருதிகளையும் பற்றிச்சித்தரித்த போதிலும், உணர்ச்சிமயமானதாகவே இருக்கும். இவரது பாத்திர எல்லைகள் எல்லைக்கட்டுப்பாடுக்கோ அரசியல் கட்டுப்பாட்டுக்கோ உள்ளடங்கியதல்ல இவைகள்தான் அன்டிறிச்சின் படைப்புகளுக்கு அகில உணர்வை ஊட்டுகின்றன' எனக் குறிப்பிட்டார் அன்டிறிக் இலக்கியத்திற்காக நோபல் பரிசுபெற்றவர்.

மிரோஸ்லாவ் கிர்லிசா யூகோஸ்லாவியாவின் பிறிதொரு எழுத்தாளர் வெளி உலகில் மிகவும் பிரசித்தமானவர். சென்ற 20 வருடங்களில் இவரது படைப்பின் 40 வெளியீடுகள் வெளியாயின. 1963-ம் ஆண்டு மட்டும் இவரது வசன இலக்கியப்படைப்புக்கள் எட்டும் 1964-ல் பத்தும் வெளியாகியுள்ளன. இவரது படைப்புக்கள் 13 மொழிகளில் வெளியாகியுள்ளன.

இத்துடன் பிருனிஸ்லாவ் நியூசைக், பிருங்கோ கோபிக் மொயிட்ருக் புலாரோனிக், ஒஸ்கார் டவிக்கோ ஆகிய சிருஷ்டிகர்த்தாக்களின் சிருஷ்டிகளும் பிறமொழிகளில் வெளியாகியுள்ளன.

## முத்துச்சரம்

### எழுத்தாளர் தினம்

மற்றெல்லாத் தொழில்கள் புரிவோரைப்போலவே, எழுதும் தொழில் ஆற்றுகின்ற இலங்கை எழுத்தாளர், எழுத்தாளர் தினம் கொண்டாடவிருக்கின்றனர் கலைத் தாயின் நாளான சரஸ்வதி பூஜாதினத்தன்று இத்தினத்தைக் கொண்டாடுவதென்றும், இவ்வருடம் தொடங்கித்தொடர்ந்துபிரதி வருடமும் கொண்டாடுவதென்றும், அன்று தினம் ஈழத்து எழுத்தாளரின், நூல் வடிவம் பெற்ற தம் படைப்புகளைக்கடைகளிலும் மற்றும் முக்கிய இடங்களிலும் வைத்து தாமே விற்பதென்றும். பின்னர் மாலையில் எல்லா எழுத்தாளர்களும் சேர்ந்து விழா எடுப்பதென்றும் இலக்கியப் பிரமுகர் ஒருவர் கூறினர். சில வருடங்களின் முன்னர். மு. போ. எ. சங்க யாழ்ப்பாணக்கிளையினர் இவ்விதம் ஒரு சரஸ்வதி பூஜா தினத்தில் எழுத்தாளர் தினம் கொண்டாடியதாயும், ஏனோ பின்னர் அவர்கள் அதைத் தொடர்ந்து செய்யவில்லையென்றும், இந்தநல்ல காரியத்தில் எழுத்தாளர்கள் நிச்சயம் கலந்து கொள்ள வேண்டுமென்றும் பிரமுகர் சொன்னார்.

### சிவஞானத்தை ஏன் அழைக்கவில்லை?

கொழும்புவரை வந்ததமிழறிஞர் ம. பொ. சி. யை யாழ்ப்பாணத்துக்கு அழைக்க இங்குள்ள தமிழறிஞர்களும், சங்கங்களும் தவறிவிட்டமை பற்றி தமிழ், இலக்கியஅபிமானிகள்வருந்தப்படுகின்றனர். அறிஞர் தாய்நாடு சென்றுவிட்டார் அவர் பல தினங்கள் கொழும்பில் தங்கிநின்ற சந்தர்ப்பத்தை விட்டு விட்டு, புதிதாக இன்னொரு தடவை தமிழகத்திலிருந்து அவரை வரவழைக்க யார் முன்வரப் போகிறார்கள்?

—அகராதி

## ஈழத்து இருவர்

சமீபத்தில் 'சிறுகதைச் செல்வம்' என்னொரு நூலினை, சாலை. இளந்திரையன் தமிழகத்தில் வெளியிட்டுள்ளார். இந்நூலில் தமிழில் இதுவரை வெளியான தரமான சிறுகதைகளும் அவைபற்றிய விமர்சனக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன. சிறப்பாக மணிக்கொடி எழுத்தாளர்களின் கதைகள் இடம்பெற்றுள்ளன.

இத்தொகுப்பில் ஈழத்து எழுத்தாளர் இருவரின் கதைகளும் சரியாசனம் பெற்றுள்ளன. ஒன்று காலஞ்சென்ற இலங்கையர்கோனின் வெள்ளிப்பாதசரம்; மற்றது எஸ். பொ. வினது 'தேர்'.

நன்றி: 'விவேகி'

## தமிழ், தாய் தான்!

நாம் பிரயோகிக்கும் தமிழ்ச் சொற்களுக்கும், சில ஆங்கிலச்சொற்களுக்கும் மிக நெருங்கிய ஒற்றுமையை நாம் அடிக்கடி கவனிக்கலாம். மொழியாராய்ச்சியில் இறங்கியிருக்கும் ஒரு சிலர் தமிழ் தான் எல்லாவற்றிலும் பார்க்கப்பழையமொழியென்றும், அதன் 'அடி' (Base) யிலிருந்து பிறமொழிகள் தோன்றின என்றும் வாதிடுகின்றனர். அவர்கள் தங்கள் வாதத்திற்கு ஆதாரமாகக் கூறும் ஒரு சில சம ஒலிச்சொற்களைப் பார்க்கலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Same | — | சமம் | Axis | — | அச்சு |
| Purity | — | பூர்த்தம் | Cow | — | கவயம் |
| Nose | — | நாசி | Thud | — | தட்டு |
| It | — | இது | Navy | — | நாவாய் |
| Gem | — | கெம்பு | Rice | — | அரிசி |
| Vary | — | வேறு | Path | — | பாதை |
| Horror | — | கோரம் | Prize | — | பரிசு |
| Kill | — | கொல் | Booty | — | பூதி |
| Sudden | — | சடுதி | Jam | — | சாம்பு |

Bank — வங்கு

பெரி. சண்முகநாதன்

# புத்தக உலகம்

### நல்லூர் நான்மணிமாலை

நல்லூர் முருகன் மீது 'சொக்கன்' பாடியுள்ள நல்லூர் நான்மணிமாலை வெளியீட்டு வைபவம் விரைவில் நடைபெற இருக்கிறது. நல்லூர் கொடியேற்றத்தோடு அநேகமாக வெளியீடும் நடைபெறும் என அறியப்படுகிறது.

### பாவையின் பரிசு

செல்வன் து. மனோகரன் எழுதிய 'பாவையின் பரிசு' என்ற நாவல் நாளை புதன்கிழமை உடுப்பிட்டி இந்துக் கல்லூரி மண்டபத்தில் வெளியிடப்பட இருக்கிறது. பல எழுத்தாளர்களும், கல்லூரி அதிபர், ஆசிரியர்களும் உரை நிகழ்த்துவார்களென்றும் விழா இறுதியில் ஹாஸ்யநாடகம்இடம்பெறுமென்றும் அறிவிக்கப் படுகின்றது.

## கதம்ப மாலை

## கவிஞருக்கு அழைப்பு

ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தினர் கவியரங்கு நடாத்துகின்றனரல்லவா? இக்கவியரங்கில் கலந்து கொள்ளுமாறு நம் நாட்டின் கவிஞர்களுக்கு மண்டலம் கீழ்க்கண்டவாறு அழைப்பை விடுத்திருக்கிறது.

அன்புடைக் கவிஞ,

நன்புலம் விரிக்கும் நற்றமிழ்க் கவிஞ! அன்பு செழுமிய ஆசியும் வாழ்த்தும் மக்கள் வாழ்வினை வளஞ்செயு மவற்றுள் தொக்க முப்பொருள் தொன்மையிலூட்டி இப்பகல் இம்மையின் எழுநிலை சிறக்கத் திப்பிய மாகிய செந்தமிழ் மொழியில் உணர்வுத் திறத்தினை உள்ளிடம் தொட்டே இணர் மலர்ச் சமூகத்தின் னிலை காட்டிப் பண்பு விரித்துநாம் பாமர மானா வொண்மையை உரிமை கொண்டனர் காலங் கடந்த விக் கவிதைப் பண்பினை ஞாலஞ் சிறக்கநா மின்றும் நன்மையால் நாவரங் கேறிய பாவரங் கமைக்க யாவரும் வம்மின் என்றழைத்தோம் பூமழை நாட்டிற் பொழியப் பாமழை கவியரங் கேறிப்படாரிமினோ.

இங்ஙனம்,

நவாலியூர் சோ நடராசன். இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் இக்காலத் தமிழ்க் கவிதைக் குழுவின்.

# பி. பி. ஸி. நடாத்தும் சிறு கதைப் போட்டி

100 பவுண்களை முதற் பரிசாகக் கொண்ட சிறு கதைப் போட்டி ஒன்றை பிரிட்டிஷ் ஒலிபரப்பு கார்ப்ரேஷன் (பி. பி. ஸி) நடாத்த இருக்கிறது. இலங்கை உட்பட வெளிநாடுகளிலுள்ள பி. பி. ஸி. நேயர்கள் இதில் கலந்து கொள்ளலாம்.

போட்டிக்கான கதைகள் ஆங்கிலத்தில் 1800 க்கும் இடையிலான சொற்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். அக்டோபர் 31-ம் திகதிக்கு முன்னராக கதைகள் பி. பி. ஸி. உலக சேவைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் தேர்ந்தெடுக்கப்படும் கதை ஜனவரியில் பி. பி. ஸி. உலக சேவையில் ஒலிபரப்பப்படும். தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கதைகள் ஒவ்வொன்றிற்கும் 20 பவுண் பரிசுகள் வழங்கப்படுவதுடன் பி பி. ஸி. உலக சேவையிலும் அவை ஒலிபரப்பப்படும்.

கதைகள் ஆசிரியரின் சொந்தக் கற்பனையில் சிருஷ்டிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். ஏற்கனவே பிரசுரமாகிய கதைகள் அங்கீகரிக்கப்படமாட்டா. கதை சிறந்த ஒரு கருவை கொண்டிருக்கிறதா என்பதனையும் கதாசிரியன் கலானுபவத்தை சர்வதேச ரீதியில் உணர்த்தும் வெளியீட்டாற்றல் பெற்றிருக்கின்றனா என்பதனையுமே போட்டியாளர்கள் கவனிப்பார்கள்.

மனித அனுபவத்தின் எந்த ஒரு அம்சத்தையாவது கதை சித்தரித்து காட்டுவதாக அமைதல் வேண்டும். கதாபாத்திரங்கள் எவ்வித கற்பனைச் சிருஷ்டிகளாக இருப்பினும் யதார்த்த வாழ்க்கையில் உலவுபவர்களாக படைக்க வேண்டும்.

இரு பிரபல எழுத்தாளர்களையும், ஒரு. பி. பி. ஸி. தயாரிப்பாளரையும் கொண்ட மூன்று மத்தியஸ்தர்கள் கதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இச்செய்தி ஏற்கனவே பத்திரிகைகளில் வெளிவந்திருந்தது யாவரும் அறிந்ததே.

## மார்ட்டின் விக்கிரமசிங்காவுக்கு மாஸ்கோவில் விழா!

ஈழத்தின் பழம் சிங்கள இலக்கிய கர்த்தா மார்ட்டின் விக்கிரமசிங்காவின் 75-வது ஜனனதினத்தில் அண்மையில் மாஸ்கோவில் விழாவெடுத்தனர்.

நட்புறவு மாளிகையில்நடந்த இவ்விழாவில் மாஸ்கோவில் கடமையாற்றும் இலங்கை ராஜதந்திரிகளும், கல்வி கற்கும் மாணவர்களும், நிபுணர்களும் கலந்து கொண்டனர்.

விழாவில் உரை நிகழ்த்திய சோவியத் எழுத்தாளர்கள், சோவியத் இலங்கை நட்புப் பாலத்தை அமைப்பதில் மாட்டின் விக்கிரமசிங்காவின் முக்கிய பாத்திரத்தை எடுத்துக் கூறினர்.

''எம்மைப் பொறுத்தமட்டில் மாட்டின் விக்கிரமசிங்காவின் நாமம் எமது நண்பனின் நாமம். ஒரு பெரும் இலக்கிய கர்த்தாவின் நாமம்'' என்று சோவியத் ஆசியர் ஆபிரிக்க ஒருமைப்பாட்டு சங்கத்தின் உபதலைவர் அனடோலியொஃப் ரொனேவ் கூறினர்.

மார்ட்டின் விக்ரமசிங்காவின் "நூற்றாண்டின்மறைவு" என்ற நாவலின் மொழி பெயர்ப்பாளரான விலாடியிர் வைகுகோலெவ், வாழ்க்கையை ஊர்ஜிதம் செய்து விசுவாசத்தை யூட்டும் படைப்புகள் அவருடைய சிருஷ்டிகள் என்றார்.

மார்ட்டின் விக்கிரமசிங்கா நீண்ட ஆயுள்பெற்று தமது உன்னத இலக்கிய பணியை மேலும்செய்யவேண்டுமென மாஸ்கோ கூட்டம் வாழ்த்து அனுப்பியது.

## ரூ. 12,500 வரை கார்கள் வாங்கலாம்

கொழும்பு, செவ்வாய்

புதிய கார்கள் வாங்குவதற்குத் தகுதியுடையோர் ரூ. 12,500 வரை பெறுமதியான கார்களுக்கு இப்பொழுது விண்ணப்பிக்கலாம் என்று இறக்குமதி கட்டுப்பாட்டதிகாரியின் திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று தெரிவிக்கிறது.

### கதாப்பிரசங்கம்

சுழிபுரம், திங்

தொல்புரம் இந்து சமய விருத்திச்சங்க ஆதரவில் இன்றுமாலை தொல்புரம் மாவடி முதலியார் மடத்தில் திரு. எஸ். கணேசசுந்தரம் ''பக்தநந்தனார்'' என்னும் பொருள் பற்றிக்கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். ஆடி அமாவாசை தினத்தை யொட்டி இவ்வைபவம் நடைபெறுகின்றது.

### பொறுக்கிய முத்து

சின்ன வயதில் சின்னக் காருக்கு ஆசை; பெரிய வயதில் பெரிய காருக்கு ஆசை. ஆமாம், வயதாக ஆக வளர்வதெல்லாம் இப்படி சின்ன வயதில் தொட்டுக்கொண்டே ஆசைகள் தாமே.

ஆசை யாரைத்தான் விட்டது. மனிதன் வளர வளர ஆசையும் வளருகிறதே.

இதுதான் இன்று நாம் பெருமையடித்துக் கொள்ளும் வளர்ச்சியா?

—ஸ்ரீரங்கன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலவுரிமைச் சங்கக்கூட்டம்

சங்கானை, திங்கள்

உடுவில் தொகுதி நலவுரிமைச் சச்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் அண்மையில் திரு. பொ. சிவஞானம் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. கீழ் வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அவ்வப்பகுதி மேலதிகாரிகட்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பஸ்வண்டிகள் இணுவில் பாலாவோடை ஊடாக மானிப்பாய் வந்தடைய சேவை விஸ்தரித்தல் புதுமடச்சந்தியிலும் பாலாவோடைச் சந்தியிலும் இரண்டு தபால் பெட்டிகளை அமைத்தல். இச்சங்கத்தின்கீழ் இயங்கும் இந்து வாலிபர் சங்கத்திற்கு நிதி உதவி பெற அரசாங்கத்துடன் தொடர்புகொள்ளல். அண்மையில் தொடங்கப்படுக்கும் சோலைவரியை உடுவில் கிராமசபையிடம் திருத்தும்படி வேண்டுதல்.

## மாணவர்களின் சுற்று விஜயம்

யாழ்ப்பாணம், செவ்.

அச்செழு மெதடிஸ்த மிஷன் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் தலைமையாசிரியை செல்வி த. நல்லதம்பி தலைமையில் ஒரு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டனர். அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள முக்கியமான இடங்களைப் பார்வையிட்ட பொழுது 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகத்திற்கும் விஜயம்செய்தனர்.

## சிறுவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது

கொழும்பு, திங்கள்

மகாவலிகங்கைக்குப் பலியான இரு சிறுவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மற்றொரு குழந்தையின் சடலம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

## லொறி விபத்து வழக்கு

சாவகச்சேரி, திங்கள்

''நான் மீசாலையிலிருந்து சாவகச்சேரி நோக்கி வரும் போது, மீசாலையில் என்னை ஒரு பஸ் விலத்திப் போய் நின்றது. அப்போது ஒருவர் பஸ்ஸில் ஏறினார். அவருடன் நின்ற சிறுமி அவரை விட்டுப் பிரிந்து பாதையைக் கடக்க முயற்சிக்கையில் என்னை நோக்கி வெகு விரைவில் வந்த லொறி அச்சிறுமியை மோதியது நான் ஓடிப்போய் அச்சிறுமியைத் தூக்கினேன்'' என்று மீசாலை விபத்து வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ரூபர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கே. கணபதிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறினார்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூன் மாதம் 21-ந் திகதி வி. சங்கரநாதன் என்பவர் எஸ் புஷ்பவதி என்னும் சிறுமியை லொறியை வெகு விரைவாகச் செலுத்திச் சென்று மோதியதாகவும் அதனால் சிறுமி இறந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இச்சிறுமியின் தாயாரும் சாட்சியமளித்தார். மேல் விசாரணை இம்மாதம் 22-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## புற்றுநோய் ஒழிப்பு

சங்கானை, திங்கள்

புற்றுநோய் ஒழிப்புப்பிரசாரமும் சுகாதார விழாவும் சங்கானை அமரிக்கன் மிஷன் பாடசாலையில பட்டின சபைத்தலைவர் திரு சி க. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்றது. அச்சமயம் புற்றுநோய் எவ்வாறு ஆரம்பிக்கின்றது; அந்த ஆபத்திலிருந்து எவ்வாறு மக்களைக்காப்பாற்றிக்கொள்ளலாம் என்பதுபற்றிமேலைத்தேச ஆராய்ச்சியின் மூலம் திரு. ஏ. இ இரத்தினசாமி விவுரைஆற்றினர் சுகாதார பரிசோதகர் பண்டிதர் எஸ். மயில்வாகனம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

## கரபந்தாட்டம்

சங்கானை, திங்கள்

வவனியா நீர்ப்பாசன இலாகா பொழுதுபோக்குக் கழக ஆதரவில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் பன்னிரண்டு கழகங்கள் கலந்துகொண்டன. இவற்றில் முதலாம் பிரிவில் கைத்தொழில் இலாகாப் பொழுதுபோக்குக் கழகமும், இரண்டாம் பிரிவில் அரசாங்க இருஷிகப் பாடசாலையும் முறையேவெற்றியீட்டியுள்ளன.

அம்பலவாணர் வெற்றிக்கேடயத்திற்கான இறுதிப் போட்டி இம்மாத முடிவுக்குள் நடாத்துவதற்கு கழகக் காரியதரிசி திரு க. சண்முகநாதன் வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித்துவருகிறார்

கரணவாய்

## சன சமூக நிலைய 28-வது ஆண்டுவிழா

உடுப்பிட்டி, செவ்.

கரணவாய் தெற்கு சன சமூக நிலைய 28-வது ஆண்டு விழா இன்று மூத்தவிநயகர் ஆலய வீதி முன்றலில் திரு. க. கார்த்திகேசு தலைமையில் நடைபெறவிருக்கிறது முள்ளியவளை மகா வித்தியாலய அதிபர் திரு. வி. பொன்னம்பலம், திரு கே. பி ஹரன், திரு. இ. மகாதேவா, பொன் கிருஷ்ணபிள்ளை, செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். நாடக, நடன நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

## 20 அடி நீளப் பாம்பு

மன்னார், திங்கள்

முருங்கன்பகுதியில் மலைப்பாம்புபோல்தோற்றமளித்த பாம்பொன்றினால் விவசாயிகள்மிகவும்பீதிகொண்டனர் செம்மண்தீவுக் கிராமத்தில் காணப்பட்ட 20 அடி நீளமான இந்தப்பாம்பு விறகுக்கட்டைபோல் வீதியில் கிடந்தது. படம்பார்த்துவிட்டுத் திரும்பியகிராமவாசிகள் இதனை அடித்துக் கொன்றனர்.

## இறுதிப்போட்டிக்கு ஸ்கந்தா தெரிவு

சங்கானை, திங்கள்

அண்மையில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற நாடகத் தெரிவுப்போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவர்களின் 'கண்திறந்த கலிங்கம்' என்னும் நாடகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இறுதித் தெரிவுக்காக இம்மாத முடிவில் இவர்கள் கொழும்பு செல்லவிருக்கின்றனர்.

## கூட்டம் நடக்கவில்லை

சுழிபுரம், திங்

வலிகாமம்மேற்கு பலநோக்குகூட்டுறவுச் சங்க சமாசவருடாந்தப் பொதுக் கூட்டம் போதிய அங்கத்தவர்கள்சமுகம் கொடுக்காததால் குறிப்பிட்டபடி நேற்று நடைபெறவில்லை. குறிக்கப்பட்ட நேரத்தில் மொத்தம் பதினைந்து அங்கத்தவர்கள்மட்டுமே சமுகம் கொடுத்திருந்தனர். இம்மாதம்21ம்தேதி மீண்டும்கூட்டத்தை நடத்துவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

## இலங்கை கம்பன் கழகத்தின்
# நாடகப் பிரதிப் போட்டி

### நிபந்தனைகள்

1. இலங்கைக் கம்பன் கழகத்தினர் தாங்கள்செப்டம்பரில் நடாத்தவிருக்கும் கம்பன் விழாவையொட்டி நடாத்தும் நாடகப் போட்டியில் கலந்து கொள்ளும் நாடகங்களின் பிரதிகளே போட்டிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. அனுப்பப்படும் நாடகங்களில் சிறந்த மூன்றிற்கு ஈழநாடு. டாக்டர் சண்முகரத்தினம் அவர்களின் ஞாபகார்த்தமாக மூன்று பரிசில்கள் வழங்கும்.

முதற்பரிசு — 150 ரூபா
இரண்டாவது பரிசு — 100 ரூபா
மூன்றாவது பரிசு — 75 ரூபா

3. தேர்ந்தெடுக்கப்படும் நாடகங்களை 'ஈழநாடு' தனது வாரமலரில் தொடர்ந்து வெளியிடும்.

4. நாடகப் பிரதிகளை அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30-8-66. பிரதிகள் அனுப்பப்படவேண்டிய முகவரி:

ஆசிரியர், ஈழநாடு வாரமலர்,
ஈழநாடு காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

5. நாடக சம்பந்தமாக ஈழநாடு காரியாலயத்தோடு எவ்வித நேரடித் தொடர்பும் கொள்ளலாகாது.

6. நாடகப் பிரதிப் போட்டி சம்பந்தமான இறுதி முடிவு, ஈழநாடு வாரமலர் ஆசிரியர்க்கே உரியது.

7. தகுதிவாய்ந்த மூவரைக்கொண்ட மத்தியஸ்தர் குழு சிறந்த நாடகங்களைத் தெரிந்தெடுக்கும்.

8. நாடகங்களை மேடையேற்றுவதற்குக் குறித்த நிபந்தனைகள், நாடகப்பிரதிப் போட்டிகளின் தெரிவுக்கும் பொருந்தும்.

9. நாடகங்கள் பதிவு அஞ்சலில் அனுப்பப்படுவது நன்று. அவை தவறிவிடின் அதற்கான பொறுப்பை ஈழநாடு காரியாலயம் ஏற்காது.


உங்கள் தொழிற்சாலைக்கு

மின் காவு குழாய்,
தண்ணீர்ச் சேவை,
காற்றேற்ற, வடிகால் குழாய்கள்,
ஆவி, ரசாயனப் பொருட் குழாய்கள்,
மழை நீர்க் குழாய்கள்,
கீழ்த் தரைக் குழாய்கள்,

ஆகியவற்றுக்கு உறுதியும் நம்பிக்கையும் அதே சமயத்தில் செலவுச் சுருக்கமுமுள்ள எஸ்-லோன் குழாயையும் இணைப்புகளையும் உபயோகித்தீர்களானால் அதிக பணம் மீதமாகும். இவற்றினால் பிற்பாடும் அதிக பணம் மீதமாகும். ஏனென்றால் எஸ்-லோன் கறள், வெப்பம், ரசாயனப் பொருள்கள் ஆகியவற்றின் தாக்கத்தினை எதிர்த்து நிற்கவல்லதென்பதனால், மாற்று குழாய்கள் பொருத்த வேண்டிய தேவை இல்லாமற் போகிறது. எஸ்-லோன் குழாய், தொழில் துறைக கருமங்களுக்கு மிகவும் உகந்தது.

எஸ்-லோன் குழாய் கீழ்க்காணும் காரியங்களுக்கு உகந்ததென்பதைப் பரிசீலித்தும் பாருங்கள்:

1. மின்காவு வேலை
2. தண்ணீர் விநியோகம்
3. ரசாயனப் பொருள் விநியோகம்
4. அமிலப் பரிசோதனை உபகரண வடிகால்
5. ஆவிகள் வெளியேறும் வடிகால்

எஸ்-லோனிலும் சிறந்ததொன்றை நீங்கள் குறிப்பிட முடியாது.

எஸ்-லோன்

உற்பத்தியாளர்கள்:
ராஜேந்திரம்ஸ் லிமிடெட்




பைப்பை வாங்கும் போது எஸ்-லோன் (S-lon) என்ற அடையாளத்தைக் கவனித்து வாங்குங்கள்

ATN


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மபுரத்தில் பாகிஸ்தான் மாணவர்கள்

யாழ்ப்பாணம், செவ்

நேற்று முன்தினம் பாகிஸ்தான் சர்வகலாசாலையைச் சேர்ந்த மாணவர்கள் தர்மபுரத்துக்கு விஜயம் செய்து பார்வையிட்டனர். இவர்களுக்கு உதவியாக காரியாதிகாரி கந்தோர் சமூகசேவைப் பகுதி உத்தியோகஸ்தர்களும் யாழ். மாவட்டப்பகுதி காரியாதிகாரி பகுதி உத்தியோகத்தர்களும் வந்திருந்தனர்.

தருமபுரம் மாதர் முன்னேற்றச் சங்கமும், மற்றும் பல ஸ்தாபனங்களும் சிரமதான மூலம் நிறைவேற்றியுள்ள பணிகளை இவர்கள் பார்வையிட்டனர்.

அகில இலங்கை காந்திய சேவா சங்கத்தின் தருமபுரக் கிளைப்பிரதிநிதி திரு. ச. கந்தசாமி உட்பட பலரும் இவர்களை வரவேற்றனர்.

இந்துமத ஆசாரமுறைப்படி வரவேற்கப்பட்ட இவர்களுக்கு இந்துமத ஆசார முறைக்கமையச் சிறந்த சைவ உணவு விருந்தளிக்கப்பட்டது. நீர்ப்பாசன வசதியற்ற மிகவும் கடினமான இந்த அகதிகள் குடியேற்ற முகாமில் இத்துணை சிறந்த உணவுகள் பரிமாறப்பட்டன. சர்வகலாசாலைப்பிரதிநிதிகள் மிகவும் மகிழ்ச்சியுடன் புகழ்ந்தனர். அதேசமயம் 600-க்கு மேற்பட்ட அகதிகள் குடியேற்ற முகாமில் நூறு பேர் வரை தான்வாக்காளர்களாக இருக்கிருர்கள் என்ற செய்தியைக் கேட்டுந்தாங்கள் அதிர்ச்சியடைவதாகவும் தெரிவித்தனர்.

உப உணவுப்பயிர்ச் செய்கைக்காக உருவாக்கப்பட்டுள்ள விசுவமடுக் குடியேற்றத்திட்டத்தையும் இவர்கள் பார்வையிட்டனர்.

புளியம் பொக்கணை கிராமசேவையாளர் தூதுக்குழுவினருக்குச் சகல விஷயங்களுக்கும் விளக்கந்தந்து பிரயாண வைபவத்தைப் பலனுள்ளதாக்கினர்.

மாலை 3 மணியளவில் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்று பாகிஸ்தான் மாணவர்கள் வழியனுப்பி வைக்கப்பட்டனர்.

# மருமாதா தேவாலயத்தில் தேவமாதா திருநாள்

மன்னர், திங்கள்

மருதமடு ஷேத்திரத்திலுள்ள மாதா தேவாலயத்தில் தேவதாயார் பரலோகத்துக்கு ஆரோகணமான திருநாள் இன்று வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும்வந்த லட்சக்கணக்கான கத்தோலிக்க அடியார்களும், மற்றும் மதத்தைச் சேர்ந்தவர்களும் இந்தத் திருநாளில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தேவாலயத்தில் நடைபெற்ற திவ்விய பூஜைகள், பிரார்த்தனைகள் ஆகியவற்றில் யாத்திரிகர்கள் கலந்து கொண்டனர். பின்னர் தாம் கடந்த காலத்தில் செய்த பிழைகளுக்கும், தவறுகளுக்கும் மன்னிப்புக்கோரும் பாவசங்கீர்த்தனஞ்செய்யும் நிகழ்ச்சி பெரிதும் கவரக் கூடியதாகவிருந்தது.

தாம்செய்த பாவதோஷங்களை அகற்றுவதற்காக, பிள்ளைகளும், குஞ்சுகளுமாக மாதாகோயிலுக்கு பல தாய்மார்கள் வந்திருந்தனர்.

## ஏலவிற்பனையில் கைக்கடிகாரங்கள்

கொழும்பு, செவ்வாய்

பிரபலமானதும் விலை உயர்ந்ததுமான நல்ல கைக்கடிகாரங்கள் மூவாயிரம், ஆகஸ்ட் 26-ல் கொழும்பு சுங்க இலாகாவின் தடுப்புக் காரியாலயத்தில் ஏலத்துக்கு விடப்படும்.

இக்கைக்கடிகாரங்கள் கள்ளக்கடத்தல் மூலமாகக் கொண்டுவரப்பட்டபோது சுங்க இலாகாவினரால் கைப்பற்றப்பட்டவையாகும்.

முதலில் இக்கைக்கடிகாரங்கள் டெண்டர் மூலம் வியாபாரிகளுக்குக் கொடுக்கப்படவிருந்தது. ஆனல் டெண்டர்களைக் குறுக்கு வழியால் தம் வசப்படுத்தி, கைக்கடிகாரங்களின் விலையைக் குறைத்து வாங்க இவ்வியாபாரிகள் முற்பட்டனர்.

இதன் விளைவாக, டெண்டர் மூலம் விற்பதைப் பிரதம சுங்க அதிகாரி ரத்துச் செய்துவிட்டு, கைக்கடிகாரங்களை ஏலத்தில் விற்கும்படி உத்தரவிட்டிருக்கிருர்.

## யாத்தறை அரபிக் கல்லூரி

யாத்தறை, ஞாயிறு

யாத்தறை கோட்டைக்கடை அரபிக் கல்லூரி முதலாவது மாணவ மன்றம் சென்ற 12-ந் திகதி வெள்ளிக்கிழமை மௌலவி செயின் யாத்தூ தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இம்மாணவ மன்றத்துக்கு எம். எம். முஸ்தாபா அமீன் தலைவராகவும், என். அப்துல் அஸீஸ் உபதலைவராகவும், ஜே. எஸ்.எம் றஸீன், யு. எல். எம்.சரீம் முறையே காரியதரிசி உபகாரியதரிசியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். சில மாணவர்கள் பேசியபின், சலவாத்துடன் கூட்டம் முடிந்ததென்று ஒரு நிருபர் எழுதுகிருர்.

## 'சிக்கல்கள் களைய அரசாங்கம்முயல்கிறது — எம். பி.

சுழிபுரம், திங்கள்

"எமது நாட்டின் கல்வி அமைப்பில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்களைக் களைந்து, நாட்டுக்குஏற்ற கல்வி அமைப்பை உருவாக்க தேசிய அரசாங்கம் முயல்கிறது. அதே வேளையில் பலவகையான பிரச்னைகள் தலைதூக்குகின்றன. இவ்வேளையில் தான் நாம் பொறுப்புடனும் கவனத்துடனும் செயலாற்ற வேண்டியிருக்கிறது" என வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற விருந்து வைபவமொன்றில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பதினெட்டு எம். பி.க்கள் தமிழ் சர்வகலாசாலை ஒன்று தேவை என முழுமனத்துடன்கேட்டுள்ளனரென்றும், ஆகையால் தமிழ் பல்கலைக் கழகம் ஒன்றே நிறுவித்தர வேண்டுமென்றும் கூறினர். மற்றும் பலரும் பேசினர்.

## இ. போ. ச. வில் தனிச் சிங்களமா? எம். பி. கேட்பார்

கிளிநொச்சி, திங்கள்

பஸ் சாரதி, கண்டக்டர் முதலிய பதவிகளுக்கு இ. போ. ச. வுக்கு விண்ணப்பித்த தமிழ்பேசும் மக்களுக்கு இப்பொழுதும் சிங்களத்தில் மட்டுமே கடிதங்கள் அனுப்பப்படுகின்றன எனவும் இதனை நிவிர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி எம் பி திரு. கா. பொ. இரத்தினம் தேசிய மயசேவை அமைச்சரைக் கேட்கவிருக்கிருர்.

இ போ ச வினுல் தமிழ் பேசும் மக்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களையும் பிறவற்றையும் தமிழில் அனுப்புவதற்கும் சபை வெளியிடும் அறிவிப்புகள், அறிக்கைகள் விளம்பரங்கள் ஆகியவற்றை தமிழிலும் வெளியிடுவதற்கு மந்திரி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் எம் பி அமைச்சரைக் கேட்டுக்கொள்ளவிருக்கிருர்.

## சுருக்கிட்டு தற்கொலை

இமையாணன், திங்.

சாரத்தைக் கிழித்து அதனைக்கொண்டு கழுத்தில் சுருக்கிட்டு ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் கந்தரோடையில் நடந்துள்ளது 32 வயதான இளையதம்பி சிதம்பரநாதன் என்பவரே இப்படியாகத் தற்கொலை செய்துகொண்டார். இவர் வீட்டு வளையில் தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு காலஞ்சென்றவரது இரண்டாவது மகனுன இளங்கோ என்பவர் தனது தாய்க்கு இதை அறிவித்ததாக மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

மூன்று சகோதரர்களையும் நான்குபிள்ளைகளையுமுடைய இவர் ஒரு அரசாங்க எழுதுவினைஞராகக் கடமையாற்றியவரென்றும், எதிர்பாராதவிதமாக விழுந்ததன் காரணமாகக் காலில் காயமேற்பட்டதென்றும், இதனுல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாரென்றும் தற்கொலைபுரிந்ததற்கு இதுவே காரணமாய் இருக்கக்கூடும் எனவும் விசாரணையின் போது ஊகிக்கப்பட்டது.

தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## களைபிடுங்கும் விழா

வவனியா, திங்கள்

"களைபிடுங்கும் இயக்கம், மாணவர்களின் வாழ்க்கையிலும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி விடுகிறது. இந்த இயக்கத்தில் மாணவர்கள் அதிகமாகக் கலந்துகொள்வதன் மூலம் நாடும் முன்னேற முடியும்"

வவனியா குடியிருப்பில் நடைபெற்ற களை பிடுங்கும் விழாவின் மூன்றும் நாள் நிகழ்ச்சிகளின் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் திரு. சிவமுத்துலிங்கம்மேற்கண்டவாறு கூறினர்.

திரு. கே. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற களைபிடுங்கும் வைபவத்தில் சுமார் 500 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## மீன்பிடிப் படகு சிதறுண்டது

யாழ்ப்பாணம், செவ்

கடந்த வியாழக்கிழமை தாழையடியிலிருந்து வலை இழுப்பதற்காக புறப்பட்ட மீன்பிடி இயந்திரப் படகு ஒன்று அன்றிரவு 11 மணியளவில் அடித்த காற்றில் [illegible] சிதறுண்டது. அதற்குச் சொந்தமான பலாலியைச் சேர்ந்த அவருன் பிள்ளையும், அவருடைய மூன்று புதல்வர்களும் கரையேறிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. படகிலிருந்த மீன்பிடித் தளபாடங்களும் அழிந்துபோய் விட்டன.

# சம அந்தஸ்து எனில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் என். எம்.மைச் சந்தித்து சுதந்திரக்கட்சியுடன் இணையும்படி வற்புறுத்தினர். சேர்ந்தோம். பின்னர் இப்போது அமைச்சராக இருக்கும் திரு திருச்செல்வம் ஸ்ரீமாவுடன் பல நாளாகத் தமிழரசுக்கட்சி சார்பில் பேச்சுவார்த்தை நடத்தினர். கடைசியில் மானசிக ஒப்பந்தம் ஒன்றையும் செய்துகொண்டார். டிசம்பரில் நடந்ததென்ன? கூட்டரசாங்கம் பதினைந்து அம்சக் கோரிக்கைகளில் முக்கியமான மொழிப்பிரச்னையையும், சிறுபான்மையினரின் பிரச்னையையும் தீர்வுகாண விட்டுவைத்தார்களா? கவிழ்த்துவிட்டார்கள். எம்மைச் சேரும்படி வற்புறுத்திக்கொண்ட தமிழரசுக் கட்சியினரே எம்மை வீழ்த்தினர்கள். இப்போது சொல்லுங்கள், தமிழர் பிரச்னையைத் தீர்த்துவைக்காததற்கு யார் காரணம்? நாங்களா? தமிழரசுக்கட்சியினரா என்பதை இப்போது சொல்லுங்கள்?

பத்திரிகைகள்மீது கை வைக்கத் தீர்மானித்திருந்தோம், அவைகள் இந்நாட்டின் முதலாளித்துவ சக்திகளின் கையில் சிக்கிச் சீரழிந்துகொண்டிருந்ததனுல். இதனைச் சாட்டாக வைத்துக்கொண்டு பிற்போக்குக் கட்சிகள் எம்மை வீழ்த்திக் கொண்டன. இப்போது இக்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டு தேசிய ஐக்கியத்தைப் பற்றிப் பேசுவது சிரிப்பாகவிருக்கிறது. தேசிய அரசாங்கத்துக்குள் இருக்கும் கட்சிகளுக்குள்ளேயே ஒற்றுமையில்லை. அதுதானே பிரதமர் டட்லி சேனநாயக்கா யாழ்ப்பாணம் வந்தபோது அம்பலமாகியது. யாழ்ப்பாணம் முற்றவெளியில் தேசிய ஒற்றுமை முழக்கம் நடந்துகொண்டிருந்தபோது நல்லூரில் தேசியக் குழப்பம் நடந்தது நமக்குத் தெரியாததொன்றல்ல.

தேசிய இனங்களிடையே ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் வளர்க்க முதலாளித்துவக் கட்சிகளால் முடியாது. முற்போக்குச்சக்திகள் படைத்த மூன்று கட்சிகளைக்கொண்ட கூட்டுக் கட்சிகளாகிய எம்மால்தான் முடியும். உங்களை எம்முடன் தோளோடு தோள் நின்று உழைக்கவருமாறு அழைக்கிறேன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த கட்டுக்கம்பளை எம். பி. திரு ரீ. பீ. சுபசிங்கா பேசுகையில் கூறியதாவது:—

1964-ம் ஆண்டு ஒரு முற்போக்கான அரசாங்கத்தை மூன்று கட்சிகள் இணைந்து அமைத்தோம். பதினைந்து அம்சக் கோரிக்கையில் சிறுபான்மையினமான தமிழர் பிரச்னையும் இருந்தது. ஆனல் தொடர்ந்து ஆட்சி செலுத்த தமிழரசுக் கட்சியினர் விடவில்லை, இப்போது எம்மீது கூசாது பழி சுமத்துகிருர்கள்.

### பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை

தேசிய அரசாங்கம் ஆட்சிக்குவந்தபிறகு 'அந்த இந்த' தமிழர் பிரச்னைகள் எல்லாம் தீர்க்கப்பட்டுவிட்டதாக சொல்லப்படுகிறது. உண்மைதானு? சில்லறை இடமாற்ற விஷயங்கள் போன்ற பிரச்னையைத்தவிர வேறு எந்தப் பிரச்னையாவது தீர்க்கப் பட்டிருக்கிறதா?

தேசிய இனங்களிடையே ஐக்கியத்தை தேசியஅரசாங்கம் ஏற்படுத்தி விட்டதாக பிரமாதப்படுத்துகிருர்கள். தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையே மோதல்! ஐக்கியதேசியக்கட்சிக்குள்ளே பிளவு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுக்கும் டட்லிக்குமிடையில் வேறுபாடு! நிலைமை இப்படியிருக்க, தேசிய ஐக்கியம் ஏற்பட்டுவிட்டதென்று சொல்வதில் என்ன அர்த்தமிருக்கிறது? வடக்கிலுள்ள தமிழர்களை ஒற்றுமைப்படுத்த முடியாமல் பெரும் பிளவை ஏற்படுத்திவிட்டு தேசிய ஐக்கியம் பற்றிப் பிதற்றுவதில் என்ன கருத்து இருக்கிறது.

### வடபகுதி மக்களுக்கு அழைப்பு

நாடுமுன்னேறவேண்டுமானுல் சோஷலிசப் பாதையில் அடிஎடுத்துவைக்கவேண்டும். அப்பாதைக்கு வாருங்கள் என்று வடபகுதி மக்களை இருகைநீட்டி அழைக்கிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சி அமைப்புச் செயலாளர் திரு. வி. ஏ. சமரவிக்கிரமா பேசுகையில் கூறியதாவது:—

பதின்மூன்று வருடங்களுக்கு முன்னுல் யு. என். பி. யினர் அரிசி விலையை 70 சதமாக உயர்த்திய போது நாம் எதிர்த்துப் போராடி ஆட்சியிலிருந்து கவிழ்த்தோம். இன்று அதே யு. என். பி யினர் மாவின் விலையை உயர்த்தியதற்காக எமது பூரண எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

சிங்கள மக்கள் தங்கள் பூரண உரிமைகளை எப்பொழுது பெறுகிருர்களோ அன்று தான் சிறுபான்மையினத்துக்கும் விடிவு ஏற்படுமென்று காலஞ்சென்ற தமிழ்ப்பெரியார் சர் வைத்தியலிங்கம் துரைசாமி அவர்கள் சொன்னர்கள். இதே முறையை நாம் பின்பற்றுவது பிழையா

இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கக் காரியதரிசி திரு. என். பி. தர்மலிங்கம், மூன்ருல் செனட் பீ. நாகலிங்கம், திருவாளர்கள் ஐ. ஆர். அரியரத்தினம், நடராசா ஆகியோருட்பட வேறு பலரும் பேசினர்.

## குடும்பக் கட்டுப்பாட்டுக்கு மூலிவகைகள்

புதுடில்லி, ஆக. 15

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் சில மூலிவகைகள் உபயோகப்படுத்தப் படலாமா என்பது பற்றி புதுடில்லி, கல்கத்தா, பம்பாய் ஆகிய இடங்களில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களில் ஆராய்ச்சி நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிய ஆராய்ச்சி இந்த வருடத்திற்குள் முடிவடையுமெனத் தெரிகின்றது.

## சைக்கிள் ஊர்வல ஏற்பாடுகள்

சுழிபுரம்திங்,

வட்டுக்கோட்டைத்தொகுதி தமிழ் அரசு வாலிப முன்னணியைச்சேர்ந்த உறுப்பினர்கள் சைக்கிள் ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர், சித்தங்கேணிச்சந்தியிலிருந்து ஆரம்பமாகும் இவ்வூர்வலத்தில் சுமார் ஐந்நூறுபேர் கலந்துகொள்வார்கள்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் பிரவுண்வீதி மேலை வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org